
# இளம்பரிதி

## முத்தமிழ் விழா சிறப்புமலர் 2009/2010



வெளியீடு

**கலாசாரப் பேரவை**

பிரதேச செயலகம்

கோறளைப்பற்று, வாழைச்சேனை



இச்சஞ்சிகையை அச்சிட்ட செலவன்பளிப்பு

**சரீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றம்**

தாளங்குடா, ஆரையம்பதி, மட்டக்களப்பு

# இளம்பரிதி

## முத்தமிழ் விழா சிறப்புமலர் 2009/2010

எம்மோடிணைந்த கலைகளை
என்றென்றும் பேணிக்காப்போம்



வெளியீடு
கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று
வாழைச்சேனை

# கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச கலாசாரப் பேரவை

| | |
|---|---|
| தலைவர் | திரு.சீ.கிரிதரன் - பிரதேச செயலாளர் |
| உபதலைவர் | கலாபூஷணம் தாழை செல்வநாயகம் (கலைஞர்) |
| செயலாளர் | திரு.கா.சிவச்சந்திரன் - கலாசார உத்தியோகத்தர் |
| உபசெயலாளர் | திரு.முத்துமாதவன் - கலைஞர் |
| பொருளாளர் | திரு.வி.எம்.வி.முதலியார் - பதவிநிலை உதவியாளர் |
| இணைப்பாளர்கள் | திரு.மு.ரவிச்சந்திரன்(நிதி) - முகாமைத்துவ உதவியாளர் |
| | திருமதி.கோ.இந்திரகுமார்(நிர்வாகம்)-முகாமைத்துவ உதவியாளர் |
| கணக்காய்வாளர் | திருமதி.ச.ஜெயந்திரா - கணக்காளர் |
| இதழ் ஆசிரியர் | திரு.சு.ராஜ்பாபு - உதவிப் பிரதேச செயலாளர் |

## நிருவாகக்குழு

திரு.ஏ.வசந்தகுமார்
திரு.சி.அரியக்குட்டி
செல்வி.கே.கல்யாணி
திரு.கே.இதயராஜா
திரு.கா.ஜெகதீஸ்வரன்
திரு.கே.கிருஷ்ணகாந்
கலாபூஷணம்.எச். மெத்தியேஸ்
திரு.செ.நல்லதம்பி
திருமதி.எஸ்.சுகுணா
செல்வி.ஆர்.விஜயமாலினி
திரு.அ.கீதா
செல்வி.என்.மந்தாகினி

## நிதி ஏற்பாட்டுக்குழு

திரு.எஸ்.ஜெயசேகர்
திரு.கா.சண்முகநாதன்
திரு.ரி.பாஸ்கர்
திரு.ஆர்.பிறேமகாந்தன்
திரு.கே.கஜேந்திரராஜா
திரு.கே.டிவாஸ்கர்
திருமதி.வை.யோகராணி
திரு.ஜே.லோபனராஜ்
திருமதி.எஸ்.சுமித்திரா
திரு.என்.நந்தகுமார்
திருமதி.ஏ.நியூசிலா
திரு.எ.சந்திரமோகன்
திரு.சா.குமாரவேல்
திரு.கே.நாகநாதன்
திரு.எஸ்.வரதராஜன்

## விழா ஏற்பாட்டுக்குழு

அலுவலக உத்தியோகத்தர்கள்
கிராம உத்தியோகத்தர்கள்
வெளிக்கள உத்தியோகத்தர்கள்
சமுர்த்தி அபிவிருத்தி
- உத்தியோகத்தர்கள்
பிரதேச கலைஞர்கள்

## மலர்க்குழு

திரு.தாழை கே.செல்வநாயகம்
திரு.எஸ்.அருட்செல்வன்
திரு.வி.எம்.வி.முதலியார்

## மலர்மீள்பார்வை

திரு.மு.தவராசா
திரு.க.காண்டீபன்

# இளம்பரிதி வீச்சுக்கள்

**முன்னுரை**

பிரதேச செயலாளர் - சீ.கிரிதரன்

**வாழ்த்துச் செய்திகள்**

சுவாமி அஜராத்மானந்தா
முதலமைச்சர் - கௌரவ சி.சந்திரகாந்தன்
பாராளுமன்ற உறுப்பினர் - கௌரவ சீ.யோகேஸ்வரன்
அரசாங்க அதிபர் - திரு.எஸ்.அருமைநாயகம்

**இதழ் ஆசிரியரின் இதயத்திலிருந்து**

திரு.சு.ராஜ்பாபு - உதவிப் பிரதேச செயலாளர்

**கவிதைகள்**

திருமதி.சா.குமாரவேல்
செல்வி.ம.சந்திரபானு
செல்வி ஸ்ரீ துஷியந்தி
திரு.வி.எம்.வி.முதலியார்
திரு.முத்துமாதவன்

**சிறுகதை**

செல்வன். ரா. லோஷித்
ஜனாப்.எஸ்.எம்.எம்.முர்ஷீத்

**கட்டுரைகள்**

திரு.தாழை செல்வநாயகம்
திரு.கே.எஸ்.ஆர்.சிவகுமார்
திரு.அ.ஸ்ரீதர்
திரு.க.காண்டீபன்

**கணினிப் பதிவு, அச்சகம்**

என்.ருசாந்தன் - ஷெரோணி அச்சகம், கூழாவடி, மட்டக்களப்பு.

**அட்டைப்பட வடிவமைப்பு**

திரு.த.மலர்செல்வன் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்



# முன்னுரை

கோறளைப்பற்று பிரதேச செயலகம் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து வருடாந்தம் நடாத்திவரும் பிரதேச முத்தமிழ் விழாவின் ஓர் அம்சமாக வெளியிடப்படும் இந்த இளம்பரிதி சிறப்பு மலரின் எட்டாவது வெளியீட்டில் பெருமகிழ்வடைகின்றேன்.

காலச்சக்கரத்தின் அதிதுரித வேகத்தினால் மாற்றமடைந்துவரும் இவ்வுலகின் மனித தேவைகளும் அவர்களது எதிர்பார்ப்புக்களும் அதிகரித்துவரும் அதே வேளை அவர்களது தேடல்களும் விரிவுபெற்றே வருகின்றன. அந்தவகையில் அவர்களது இலக்கியம் சார்ந்த சமூகத்தேடலுக்கு ஒரு சிறு களம் அமைத்துக் கொடுக்கும் செயற்பாடாகவே நான் இந்த மலர் வெளியீட்டினைக் கருதுகின்றேன்.

ஒரு சமூகத்தின் அல்லது ஒரு பிரதேசத்தின் வாழ்வியல் அம்சங்கள் அச்சமூகத்தின் எதிர்கால சந்ததிக்கு மிகச் சரியான முறையில் கையளிப்புச் செய்யப்படல் வேண்டும். ஏனெனில் அதுவே அச் சமூகத்தின் சிறப்பையும் அவர்களது கலாசார பாராம்பரியங்களை வழிவழியாக பேணிக்காப்பதற்கு அடித்தளமாக அமையும்.

இவ்வாறான ஒரு செயற்பாடாகவே இப்பிரதேச மக்களது தற்போதைய வாழ்நிலை, கல்வி, பொருளாதாரம், இலக்கியம் சார்ந்த அவர்களது ஈடுபாடு போன்ற பல்வேறு கலாசார பாரம்பரியங்களையும் அவை வடிவங்களாக எதிர்கால சந்ததிக்கு எடுத்துக்காட்டும் ஊடகமாக இவ் இளம்பரிதி சிறப்பு மலர் அமைந்துள்ளது. என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

கலை கலாசார நிகழ்வுகளுக்காக போதுமான நிதிவளம் சம்பந்தப்பட்ட அமைச்சினால் அல்லது சம்பந்தப்பட்ட திணைக்களத்தினாலோ ஒதுக்கப்படாத நிலையிலும் எமது பிரதேச செயலக எல்லைக்குட்பட்டு அரசார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தும் பொதுமக்களிடம் இருந்தும் பெற்றுக் கொள்ளும் சொற்ப நிதி வளத்தைக் கொண்டு இவ்வாறான இலக்கிய வெளியீடுகளைச் செய்வதும் கலாசார விழாக்களை நடாத்துவதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

இவ்வாறு பல சிரமங்களுக்கு மத்தியிலும். இந்நூலினை சிறப்புற வெளியிடுவதற்கு உதவிய கலாசாரப்பேரவை உறுப்பினர்களுக்கும் ஆக்கங்கள் தந்துதவிய கலைஞர்களுக்கும் அலுவலக மற்றும் வெளிக்கள சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் நிதிசேகரிப்பில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் கலாசார நிகழ்விற்கு எம்மால் நிதியுதவி செய்ய முடியாது என வெளிப்படையாக அறிவித்த நிலையில் இம்மலர் வெளியீட்டிற்கான முழுத் தொகையினையும் வழங்குவதற்கு முன்வந்த மட்/தாழங்குடா சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்திற்கும் அதன் உத்தியோகத்தர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுபோலவே நிதியுதவியளித்த இப்பிரதேச மக்கள் வார்த்தகர்கள் விளம்பரங்கள் வழங்கிய வியாபார ஸ்தாபனங்கள் இப்புத்தகத்தை அழகுற அச்சிட்ட மட்டக்களப்பு ஷெரோணி அச்சகத்தாருக்கும் அனைவருக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

**திரு.எஸ்.கிரிதரன் (SLAS)**
பிரதேச செயலாளரும் கலாசார பேரவை தலைவரும்
பிரதேச செயலகம் வாழைச்சேனை

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
ASHRAMA & CHILDREN'S HOMES,
Ramakrishnapuram, Batticaloa, Sri Lanka.
00 94 065 - 2222752,
E-mail rkmbat@eureka.lk

# வாழ்த்துச் செய்தி



கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து ஆண்டுதோறும் நடாத்திவரும் கலாசார விழாவும் அதனையொட்டி இடம்பெறும் ''இளம்பரிதி'' எனும் மலர் வெளியீடும் பாராட்டத்தக்க நிகழ்வுகளாகும்.

கலாசாரமும் பண்பாடும் ஓர் சமூகத்தின் அத்திவாரமாக விளங்குவதுடன் அவையே ஒரு சமூகத்தின் அந்தஸ்தினை எடுத்தியம்பும் அடையாளமாகவும் விளங்குகின்றன. நமது சமூகத்தின் கலாசாரம் உறுதியான ஆன்மீக விழுமியங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். அத்தகைய விழுமியங்கள் இதுபோன்றே விழாக்களின் மூலமாக பரந்த அளவில் வலியுறுத்தப்படுகின்றன.

பிரதேசத்தின் வரலாறு கோயில்கள் பற்றிய ஆய்வு, நாட்டாரியல், பாடசாலை மாணவர்களது ஆக்கங்கள் மற்றும் பிரதேச கலைஞர்களது சிறுகதை, கவிதை போன்ற புதிய கலை பண்பாட்டம்சங்களை இந் நூல் தாங்கியவாறு வெளிவருவது சிறப்பம்சமாகும்.

கலாசார பேரவையின் கலாசார விழாவும் இளம்பரிதி மலர் வெளியீடும் சிறப்புற நடந்தேறவும் இந் நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் சகல நலன்கள் பெருகவும் பகவான் ஸ்ரீ ராமக்கிருஸ்ண தேவனின் பேரருள் வேண்டி பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

இறைபணியில்
**சுவாமி அஜராத்மானந்தா**

## வாழ்த்துச் செய்தி
## [முதலமைச்சர் கிழக்கு மாகாணம்]



கோறளைப்பற்று பிரதேச கலாசார பகுதியினரால் வெளியிடப்படுகின்ற இந்த ''இளம்பரிதி'' வெளியீட்டு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அளவில்லா ஆனந்தமடைகின்றேன். ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமான கலாசாரமும் வரலாறும் உண்டு. அவ்வரலாற்றுடனும் பிணைந்தே அப்பிரதேசத்தின் சமூகவியல் கட்டமைப்புக்கள் ஒழுங்கமைக்கப் படுகின்றன. அவ்வகையில் ஒரு பிரதேசத்தின் கலாசாரமானது அப்பகுதி வாழ் மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த ஒன்றாகும். எனவேதான் ஒவ்வொரு பிரதேசத்தினதும் கலாசாரத்தினை அதன் தனித்துவமும் மூலவடிவமும் கெடாமல் பாதுகாப்பதுடன் வளர்த்தெடுப்பதும் இன்றியமையாத ஒன்றாகும். இவ்வகையில் இவ் இளம்பரிதி இப்பிரதேச கலாசாரத்தின் காவலனாகவும் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருக்குமென்பதில் எனக்கு ஐயமில்லை.

கோறளைப்பற்று வாழைச்சேனைப்பிரதேசத்திற்கு அருமையான அழகான கலாசார பண்புகளும் உண்டு இவை எமது நாட்டில் அந்நியரின் வருகைக்கு முன்பிருந்தே எமது மூதாதையர்களால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கான பல எச்சங்கள் இன்றும் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு பழம்பெரும் சிறப்புமிக்க பகுதிகளில் இப்பகுதியும் ஒன்றாக காணப்படுகின்றது. அது போலவே அதன் கலாசாரப் பண்புகளும் சிறப்பானவை ஆகும்.

கோறளைப்பற்று பிரதேச செயலக இளம்பரிதி எனும் இவ் வெளியீடானது பாராட்டப்பட வேண்டியதும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். அதற்காக தமது சிந்தனையை செயலுருவாக்கிய அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் பிரதேச செயலாளர் மற்றும் கலாசார பிரிவுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ.சி.சந்திரகாந்தன்.** முதலமைச்சர் - கிழக்கு மாகாணம்



# வாழ்த்துச் செய்தி

**கௌரவ. சீ. யோகேஸ்வரன்,**
*பாராளுமன்ற உறுப்பினர்,*
*மட்டக்களப்பு மாவட்டம்*

கோறளைப்பற்று பிரதேச செயலகத்தால் நடாத்தப்படவிருக்கும் கலாசார விழா நிகழ்வினையொட்டி வெளியிட இருக்கும் ''இளம்பரிதி'' என்னும் சிறப்பு மலருக்கு வாழத்துச் செய்தி வழங்குவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூல் வெளியீடானது கோறளைப்பற்று சமூகத்தின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுவதாக அமைய உள்ளது. அதுமட்டுமன்றி தற்கால மக்களின் வாழ்விற்கும் எதிர்கால மக்களின் வாழ்விற்கும் உதவக்கூடிய பல அம்சங்களை தாங்கி வருகின்றது. இப்பிரதேச கலை, கலாசார, சமூக, அரசியல், பண்பாட்டு விழுமியங்கள் இதன் மூலம் வெளிக்காட்டப்படுகின்றது.

பொதுவாக கோறளைப்பற்று பிரதேசத்து மக்களின் வாழ்வியல் தன்மையை இம்மாவட்ட மக்களும் ஏனைய மாவட்ட மக்களும் அறிந்து கொள்வதுடன் சர்வதேச கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை எடுத்துச் சொல்லும் ஒரு கருவியாக இளம்பரிதி அமையும் என்பது வெள்ளிடை மலையாகும்.

எமது ஈழமணி திருநாட்டில் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு சின்னங்கள் தற்காலத்தில் திட்டமிடப்பட்டு அழிக்கப்படும் இவ்வேளையில் இவ்வாறான நூல் பல வகையிலும் தற்போது துன்புறும் எமது சமூகத்தின் எதிர்கால சந்ததியினருக்கு தற்கால நிலமையை எடுத்துக் காட்டும் ஒரு சாதனமாக விளங்கும் என்றால் மிகையாகாது.

எனவே இக்கலை கலாசார விழாவில் வரலாற்றுச் சான்றாக மலரும் இவ் இளம்பரிதி சிறப்புற அமைய இப்பிரதேச மகன் என்ற வகையில் நல்வாழ்த்துக்களை மகிழ்வோடு தெரிவிக்கின்றேன்.

**கௌரவ. சீ. யோகேஸ்வரன்,**
பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்டம்

# வாழ்த்துச் செய்தி

**திரு.சுந்தரம். அருமைநாயகம் (SLAS)**
*அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,*
*மாவட்ட செயலகம், மட்டக்களப்பு.*



கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் கலாசார விழாவையொட்டி வெளியிடவிருக்கும் ''இளம்பரிதி'' எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வாழைச்சேனையில் வாழையடி வாழையாக வளர்ந்து வருகின்ற இளம்பரிதி எனும் நூலானது வாழைச்சேனை வாழ் பெரியோர், சிறியோர், பண்டிதர், பாமரர், கலைஞர், கவிஞர் ஆகிய யாவரினதும் கலை உணர்வுகளையும் உள்ளக்கிடக்கைகளையும் வெளிக் கொணரும் ஒரு ஊடகமாக விளங்குகின்றது. என்றால் மிகையாகாது. சூரியன் எவ்வாறு சிறிது சிறிதாக தனது ஒளியை பரப்பி பின் முழு உலகிற்கும் தனது ஒளியைக் கொடுக்கின்றதோ அதுபோன்று இந் நூலும் சிறிய நூலாக ஆரம்பித்து இன்றுபல கலை வடிவங்களையும் தாங்கி வரும் பொக்கிஷமாக வளர்ந்துள்ளமை பாராட்டத்தக்கது.

எனவே இந் நூல் வெளியிடப் பாடுபட்ட கலாசார பேரவை தலைவர்க்கும் சக ஊழியர்க்கும் கலாசார விழாவை நடாத்த ஒத்தாசை நல்கிய யாவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.சுந்தரம். அருமைநாயகம்
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,
மாவட்ட செயலகம்,
மட்டக்களப்பு.



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து

திரு.சு.ராஜ்பாபு (SLAS)
உதவிப் பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம், வாழைச்சேனை.

இளம்பரிதியின் எட்டாவது ஆண்டு முத்தமிழ் சிறப்பு மலர் ஊடாக சந்திப்பது மகிழ்ச்சி,

இவ் எட்டாவது மலரின் சிறப்பு எனும் போது கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் சமூகத்தின் பல துறைகளையும் தொட்டு நிற்கின்றன,

இவ்வகையில் ஆக்கங்களை எடுத்து நோக்குகையில் மூத்த படைப்பாளிகளும் இளைய தலைமுறைகளினதும் களமாக இது இருப்பதுடன் எதிர்வரும் காலங்களில் மூத்தபடைப்பாளிகளின் வழிகாட்டலில் இளைய தலைமுறையின் முழு வீச்சாக இம்மலர் வெளிவர வேண்டும் என்பதுடன் கோறளைப்பற்று பிரதேச அரசியல் பொருளாதார சமய சமூக விழுமியங்களை கொண்டு வெளிவர வேண்டும் என்பதுடன் சிறுவர்களின் திறன் படைப்பாற்றல்களை வளர்த்து கொள்ள சந்தர்ப்பம் பெற வாய்ப்பு ஏற்படுத்துவது இன்றைய தேவையாக உள்ளமையினால் அதற்கான களத்தினையும் நாம் அரசார்பற்ற மற்றும் அரச நிறுவனங்களின் ஊடாக ஏற்படுத்தி கொள்ள வேண்டும்,

இவ்வாறான எண்ணங்கள் எதிர் காலத்தில் நிறைவு பெற வேண்டும் எனும் அவாக் கொண்டு இம்மலரின் வெற்றிக்கும் விழாவுக்கும் உதவிய சகலருக்கும் குறிப்பாக இம்மலரின் அச்சிடல் செலவுகளை பொறுப்பு ஏற்ற மட்டக்களப்பு சரீரம் அமைப்புக்கு எமது பிரதேச செயலகத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.சு.ராஜ்பாபு (SLAS)**
உதவிப் பிரதேச செயலாளரும்
இதழாசிரியரும்
பிரதேச செயலகம்,
வாழைச்சேனை.

# மட்டக்களப்பு மாநிலத்தில் மறைந்து வரும் மரபு வழிக் கலை மகுடி விளையாட்டு



மட்டக்களப்பு பிரதேசத்தில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பல பாரம்பரிய கலைகள் மக்கள் மத்தியில் சிறப்புப் பெற்று நடைபெற்று வந்துள்ளன. இவை தமிழ் மக்களின் முக்கியமான பண்டிகை தினங்கள், கோவில் உற்சவங்கள், கலை விழாக்கள், அரச வைபவங்கள் ஆகியவற்றில் இடம்பிடித்து வந்துள்ளன. அக்கலைகளுள் முக்கியமானவை கூத்து, மகிடிக்கூத்து, வசந்தன் ஆட்டம், புலியாட்டம், கப்பல் கட்டுதல், கோடுகச்சேரி விளையாட்டுக்கல்யாணம், ஊஞ்சலாட்டம், பறைமேளம், கொம்பு விளையாட்டு ஆகியன பிரசித்தி பெற்றன. இவை தற்பொது மக்கள் மத்தியிலிருந்து மறைந்து கொண்டு வரும் ஆபத்தான நிலையில் உள்ளன.

இவற்றிற்கான காரணங்களைப் பின்வருமாறு கூறலாம்.

சினிமாவின் தாக்கம்
தொலைக்காட்சி
அரசினரின் அக்கறையின்மை
மக்களின் ஆர்வமின்மை
படித்தவர்கள் முன்வராமை
நிதியுதவிகள் கிடைக்காது போனமை
நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள்
மக்களின் இடப் பெயர்வுகள்
கலைப் பொக்கிசங்களைப்பாதுகாக்காமை

போன்றவற்றை முக்கிய காரணிகளாகக் கூறமுடியும்.

## மகுடிக் கூத்து

இப்பிரதேசத்தில் இடம் பெற்ற ஆயுதக் குழுக்களின் நடவடிக்கையினால் ஏறத்தாழ இருபத்தைந்து வருடகாலங்களுக்கு மேலாக இக் கூத்து மக்கள் மத்தியிலிருந்து மறைந்துவரத் தொடங்கியது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இது அதிகமாக நடைபெற்று வந்தபோதிலும் மூதூர், யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, வவுனியா ஆகிய தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களிலும் நடைபெற்று

வந்துள்ளதாக அறியமுடிகின்றது. இது "மகுடிக்கூத்து" என்று அழைக்கப்பட்டபோதும் மக்கள் மத்தியில் ஓடி, ஆடும் விளையாட்டாகவே கணிக்கப்பட்டது. இதனால் இப்பிரதேசத்தில் நாட்டுக் கூத்தினை கூத்து என்றும், மகுடிக் கூத்தினை "மகுடிவிளையாட்டு" என்று மக்கள் அழைத்து வந்தனர்.

இக்கலைக்கு விசேடமான ஆடை அணிகளோ, எழுதப்பட்ட நூல்களோ ஏடுகளோ, கிடையாது கோவில்களில் பாவிக்கப்படும் "தவில்" எனப்படும் இசைக்கருவியும், "மகுடி" எனப்படும் (பாம்பாட்டுக்குறவர்கள் குழல் ஊதி பாம்பாட்டுவதற்கு பயன்படுத்தும் கருவி) கருவினையும் மாத்திரம் கொண்டு காண்பிக்கப்படும் ஒரு வகைக்கலை நிகழ்ச்சியாகும். "மகுடி" எனும் இசைக்கருவியைக் கொண்டு விளையாட்டாகக் காட்டப்படுவதனால் "மகுடி விளையாட்டு" என்றே இப்பிரதேச மக்களால் கூறப்பட்டு வந்தது. இவ்விளையாட்டு மந்திர தந்திர விளையாட்டுக்களை மையக் கருவாக கொண்டு, பொழுது போக்கிற்காக மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தது எனலாம்.

மட்டக்களப்பை விட ஏனைய பிரதேசங்களில் சிறு தெய்வ வழிபாட்டினை கருவாக வைத்து ஆடப்பட்டு வந்துள்ளதனை அறியமுடிகின்றது. கோவில்களில் தெய்வம் ஆடுபவர்களைப்போன்று, அபிநயம் செய்து நடித்துக்காட்டப்படுவது இதன் சிறப்பு அம்சமாகும். இதனால் இதனை நாடகத்திற்குரிய அடிப்படை அம்சங்களைக் கொண்ட ஒரு கலை என்றும் கூறமுடிகின்றது.

## மட்டக்களப்பில் ஆடப்படும் மகுடிக்கூத்து மூன்று வகையான பிரிவில் அடங்குகின்றன.

1வது வகை மகுடி விளையாட்டு -

நீள்சதுரமானதொரு வெட்டை வெளியில் ஆடப்படுவது. மட்டக்களப்பு பிராமணர்களான மந்திரவாதிகளுக்கும் மலையாள தேசத்திலிருந்து வரும் மந்திரவாதிகளுக்கும் நடைபெறும் மந்திரவித்தைகளையுடைய போட்டி - மந்திரத்தில் சிறந்தவர்கள் மட்டக்களப்பார்களா? மலையாளத்தார்களா? மலையாளத்தார்களுக்கு மதுவும் மாமிசமும் தருவதாக ஆசை வார்த்தை கூறி அதில் மயங்கிய அவர்கள் அங்கு மாட்டப்பட்டிருக்கும் சுருக்கில் சிக்கி தாங்கள் மந்திரத்தில் தோற்றுப்போவதாக ஒத்துக் கொள்வதும், மகுடி விளையாட்டை நாடகம் பழகுவதுபோல் பழகுவதுமில்லை, ஒத்திகை பார்ப்பதுமில்லை, மகுடி

சம்பந்தமான கதை எங்கும் எழுதப்படவில்லை இப்படித்தான் ஆடுவது என்ற புத்தகமோ, ஏடுகளோ எழுதப்படவில்லை. இவ்விளையாட்டு மட்டக்களப்பில் களுதாவளை, ஆரையம்பதி, கிரான் கிண்ணையடி பேத்தாழை, கல்குடா வாழைச்சேனை ஆகிய கிராமங்களில் முப்பது வருட காலங்களுக்கு முன்னர் ஆடப்பட்டு வந்தது. 2004ம் ஆண்டில் பேய்த்தாழைக் கிராமத்தில் விபுலானந்த வீதியில் கலாபூசணம் தாழை செல்வநாயகத்தின் தயாரிப்பில் இறுதியாக ஆடிக்காண்பிக்கப்பட்டது.

## மகுடிக்கதையின் தொடக்கமும் முடிவும்

முதலில் இவ்விளையாட்டிற்கு நீள் சதுர வெட்டை ஒன்றை தெரிவு செய்ய வேண்டும். அதன் ஒரு பகுதியில் பார்வையாளர்கள் மூன்று பக்கமும் அமர்ந்து அல்லது நின்று பார்க்கக்கூடியதாக ஒரு பந்தல் சேலைகளால் அமைக்கவேண்டும். பந்தலில் உள்ளே இருப்பவர்கள் வெளியில் தெரியாதவாறு சேலைகள் கட்டவேண்டும். பந்தலில் முன்னால் கமுகை மரம் ஒன்று நடப்பட வேண்டும். அதன் அடியில் வேப்பங்குழைகளை உயர்த்தப்பட்ட மண்குவியலின் குவித்துவைத்து அதனுள் வெளியில் தெரியத்தக்கவாறு சாராயப்போத்தல் மாதிரி ஒன்றைக் காட்டவேண்டும். முடிந்தால் கமுகை மரம் சுழல்வது போல் செய்து காட்டலாம். இவ்விடயம் பார்வையாளருக்குத் தெரியாதவாறு இருக்க வேண்டும்.(வித்தை காட்டுவதுபோல்)

பந்தலின் முன்னால் 7 அல்லது 5 பிராமணப்பிள்ளைகள் பூநூல் தரித்து பாய் போட்டு கும்பத்துடன் அமர்ந்திருக்க வேண்டும். (நேர் வரிசையாக) பந்தலின் உள்ளே இரு பிராமணர்கள் இருப்பார்கள். ஒருவரின் கையில் மணியும், மற்றவர் கையில் தண்ணீர் செம்பும் வேப்பங் குழையும் இருக்க வேண்டும்.

## கதையின் ஆரம்பம்

மலையாள தேசத்திலிருந்து தன் மனைவி காமாட்சியுடன் மட்டக்களப்புக்கு வரும் ஓண்டிப்புலி என்பவன் வருகின்ற வழியில் இருகுறவர்களைச் சந்திக்கிறான் அவர்களையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டு வருகிறான். (இவர்கள் ஊர்ப்பகுதிகளிலிருந்து விளையாட்டு நடைபெறும் இடத்திற்கு வரவேண்டும்) மட்டக்களப்பில் ஓரிடத்தில் மந்திர விளையாட்டுக்கள் நடப்பதாக அறிந்து அவ்விடத்திற்கு வருகிறார்கள் அவர்கள் கதைக்கும்

மொழி புரியாதிருக்க வேண்டும் (கொச்சைத் தமிழ்)

அப்பொழுது பிராமணர்கள் எதிர்ப்பட்டு அவர்களைச் சந்திக்கிறார்கள் இரு கோஸ்டிகளுக்கும் வாய்த்தர்க்கம் நடைபெறும், அங்கு நிற்கும் பொதுமக்களும் அவர்களிடம் கேள்விகள் கேட்பார்கள். அவர்கள் காசியமாக பதில் சொல்வார்கள். சம்பாசனைகள் நடைபெறும், தூஷனை வார்த்தைகளும் சம்பாசனையில் வரும். அந்த இடத்தில் காமாட்சியை பிராமணர்கள் கடத்திவிடுவார்கள் குறவர்கள், தவிலுடன் சுற்றிவர, தேடி ஓடி வருவார்கள் இருபக்கங்களும் உள்ள முனிகள் அவர்களை விரட்டுவார்கள். ஆளுக்காள் மந்திரம் சொல்லி விளையாட்டுக்காட்டுவார்கள்.

பிராமணர்களின் கட்டளைப்படி முன்னால் உள்ள பிராமணர்களின் கும்பங்களை மடக்கி, ஈற்றில் கமுகை மரத்தடியில் புதைக்கப்பட்டிருக்கும் சாராய போத்தலையும் கோழிச் சேவலையும் எடுப்பதற்கு முயற்சிப்பார்கள். பிராமணர்களின் ஆசை வார்த்தையில் மயங்கிய மலையாளத்தார், முடிவில் கமுகை மரத்தில் வைக்கப்பட்டிருக்கும் சுருக்கில் சிக்குவார்கள் அப்போது தாங்கள் தான் வென்றதாக பிராமணர்கள் கூறி மட்டக்களப்பு மந்திரம் வென்றதாக முடிவு செய்வார்கள்-

## இதுவே மட்டக்களப்பில் அதிகமாக காண்பிக்கப்படும் முதல் வகை

## மகுடி விளையாட்டு

மகுடி விளையாட்டின்போது பேசப்படும் விடயங்கள்:-

குறவன் இடுப்பில் தவிலைக்கட்டிக் கொண்டு லகே......... லகே........ என்று கூறியவாறு தவிலையும் தட்டிக் கொண்டு பார்வையாளர்களின் மத்தியிலும் போடப்பட்டிருக்கும் பந்தலைச் சுற்றியும் ஓடி ஓடித்திரிதல்.

மட்டக்களப்பு மந்திரத்தால் கட்டப்பட்டு அவன் வீழ்ந்தால் காமாட்சி ஓடிச் சென்று அவனுக்கு மந்திரம் போட்டு எழுப்புதல்.

குறவன் விழுந்து கிடக்கும்போது அண்ணண்ட பொண்டாட்டியே1......... என்று கூப்பாடு போட்டு கத்தல்

மட்டக்களப்பு பிராமணரை பார்த்து நீங்க.......... நொட்டிப்போட்டுத்தான் போவயள்.. என்று குறவன் கூறுவது -

பிராமணர்கள் மலையாளத்தாரிடம் முதலில் நீங்கள் இந்த கும்பத்தையெல்லாம் எடுக்க வேண்டும். கடைசியாக அந்த கமுகை

மரத்தடியில் சாராயப் போத்தலும் ஆட்டுக்கிடாவும் கோழிச் சேவலும் உள்ளன. அவற்றையும் எடுக்க முடியுமானால் உங்கள் மந்திரத்தின் கெட்டித்தனத்தைக் காட்டிப்பாருங்கள் என்று கூறுவது.

கடைசியாக அனைவரும் சுருக்கு கயிற்றில் சிக்கியவாறு சத்தம் போட்டுக் கத்துதல் போன்றவை அங்கு நடக்கும் சம்பவங்கள். இந்நிகழ்வுடன் மகுடி விளையாட்டு முடிவடையும்

இவ்விளையாட்டு ஏறத்தாழ இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெறும். ஒருவர் பார்வையாளர்களுக்கு இக்கதை பற்றி அடிக்கடி விளக்கிக் கொண்டிருப்பார்.

## 2வது வகை மகுடி விளையாட்டு

இதற்கும் எழுதப்பட்ட கதை எந்த ஏடுகளிலோ, புத்தகங்களிலோ இல்லை- கதையம்சம் குறைவு. இதில் வேடன் வேடுவிச்சி வெள்ளைக்கார ஜோடி ஆகியோர் வந்துபோதல், இடையிடையே புலியாட்டம் ஆகியனவும் நடைபெறும். வாயால் கதைபேசியே பார்வையாளர்களை சிரிக்க வைத்தல் ஆகியனவும் நடைபெறும்.

## 3ம் வகை மகுடி விளையாட்டு

இதற்கு எழுதப்பட்ட கதையுள்ளது. மந்திரங்களையுடையது. சிறு தெய்வ வணக்கம் குறவன், குறத்தி பாத்திரங்களாக வருதல் ஆகியன உள்ளன. இதில் குறவன் பெயர் சிங்கன், குறத்தி பெயர் சிங்கி எனவும் கூறப்படும்.

காமாட்சி, மீனாட்சி என்ற அக்கா, தங்கை கதையாகவும் கூறப்படும் நாடகம் போன்று நடிக்கப்படும்.

## யாழ்ப்பாணத்து மகுடி விளையாட்டு

இதில் பிராமணர்களுக்கும் முஸ்லீம் வியாபாரிகளுக்கும் அல்லது பிராமணர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் நடைபெறும் தகராறுகள் காட்டப்படும். கப்பலில் வரும் முஸ்லீம் வியாபாரிகள் பேய்க்குஞ்சுகளைக் கூட்டி வருவதும், பிராமணர்களைச் சந்தித்து அவர்களை கதைபேசி விரட்டுவது போலவும் காட்டப்படுவது

வன்னியில் நடைபெறும் மகுடிக் கூத்தில் நடிப்பவர்களுக்கு காலில் சலங்கை கட்டப்பட்டிருக்கும் பெண்களுக்கு காலில் சலங்கை கட்டப்பட்டிருக்கும் பெண்

பாத்திரங்கள் வருவார்கள். இதற்கும் எழுத்துப்பிரதி இல்லை நாட்டார் பாடல்களை இயற்றிப்படிப்பார்கள்.

## பொதுவான கருத்துக்கள்:-

மகுடி விளையாட்டு சமயப்பிரசாரங்களை மேற்கொள்வதற்காக அந்தச் சமயத்தவர்களால் இயற்றப்பட்டிருக்க வேண்டும். சமயத்தைப்பரப்புதல் இதன் கருவாகவுள்ளது. இந்தப்பிரதேசத்தில் இருந்தவர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களுக்கும் ஏற்பட்ட சமயப் போட்டிகள் தான் இக்கதையின் முக்கிய அம்சமாகவுள்ளது. கவனிக்கத்தக்கது. மந்திர தந்திரங்களும் எங்களைவிட மந்திரத்தில் வல்லவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. என்ற தத்துவமும் நடிப்பவர்களுடன் பார்வையாளர்கள் கதைத்துப்பேசுவதும் மந்திரம் சொல்லி குறவனின் பின்புறத்தில் அடித்துச் சிரிப்பூட்டுதல் (வேப்பங்குழையால்) ஆபாசமான மகுடிக்கதைகள் ஆகியன இதன் சிறப்பம்சமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மகுடி விளையாட்டினை நான் பல தடவைகளில் பங்கேற்று நடித்துள்ளதுடன், 2004ம் ஆண்டில் கடைசி முறையாக சித்திரை வருடப்பிறப்பையடுத்து பேத்தாழைக்கிராமத்தில் நடத்திக் காட்டியுள்ளேன். இம் மகுடி விளையாட்டிற்கு தேவையான நிதியுதவிகள் பெறமுடியாத சூழ்சிலையே இப்பாரம்பரிய கலையானது மறைந்து போவதற்கு முக்கிய காரணமாகவுள்ளது என்பதைத் துணிந்து கூறுவேன்.

**கலாபூஷணம் தாழை செல்வநாயகம்**

கல்குடா வீதி,
பேத்தாழை,
வாழைச்சேனை.
15.12.2010

தொடர்புகளுக்கு: 077 3109524

# பண்டைய மட்டக்களப்பில் துறை முகங்களும் கப்பல் போக்குவரத்துகளும் ஓர் ஆய்வு



மட்டக்களப்பு பேச்சு வழக்கில் மட்டக்களப்பின் எட்டுத் துறைமுகங்கள் எனும் சொற் தொடர் பாவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அதனை மையமாகக் கொண்டே இக்கட்டுரையானது மட்டக்களப்பு மாவட்டத்தின் பண்டைய கால கப்பல் போக்குவரத்தில் மட்டக்களப்பு துறைமுகங்களின் ஆதிக்க செல்வாக்கினை ஆராய்வதை இலக்காகக் கொண்டமைகின்றது.

இவ்வாய்வுக்கட்டுரைக்கு உறுதுணையாக மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் முத்தமிழ் விழாவின்போது வெளியிடும் சிறப்பு மலராகிய தேனகத்தில் 1994 ம் ஆண்டு திரு.ரி.பாக்கியநாயகம் எழுதிய "கப்பல் போக்குவரத்திற்கு உகந்த இடம் மட்டக்களப்பு" 2000ம் ஆண்டு திரு - திமிலை மகாலிங்கம் எழுதிய அன்றைய மட்டக்களப்பின், பிரதான போக்குவரத்து வசதிகள் 2001 ம் ஆண்டு திருவ. சிவசுப்பிரமணியம் எழுதிய பூர்வீக மட்டக்களப்பு மக்களின் வணிக முயற்சிகள் எனும் திருமதிசி.ப. தங்கத்துரை (1998) எழுதிய வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வரலாற்று நூலினையும் அடிப்படையாக கொள்வது குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் அரேபிய சாம்ராச்சியம் உச்ச நிலையில் இருந்தபோது பாக்தாத்தில் வாழ்ந்த அரேபியச்சக்கரவர்த்தி ஹருன் அல்ரஷீத் காலத்தில் (786 - 809) தோன்றிய அரேபிய ஆயிரத்தொரு இரவுகள் என்ற கதையினுள் கற்பனைகள் நிறைந்த ஓர் நூலாகவிருந்த போதிலும் அரேபிய வணிகர்களும் போர் வீரர்களும் கேட்டறிந்த பல செய்திகளின் பல கதைகள் அந்நூல் ஆசிரியர் புனைந்துள்ளார். இந் நூலில் வரும் "சிந்துபாத்தின் யாத்திரைகள் என்ற கதையில் மட்டக்களப்பு துறைமுகங்கள் சிலவற்றின் பெயர்கள் காணப்படுகின்றன.

அந்நூலின்படி மட்டக்களப்பு பிரதேசத்தின் "அகில்" என்னும் வாசனைப் பொருளைத் தரும் கள்ளி வகைகளை சேர்ந்த செடிகள் ஏதொச்சையாக வளர்ந்து கிடந்தன. இந்த வாசனைப் பொருள்களை வாங்கி செல்வதற்காக மட்டக்களப்பு பிரதேச துறைமுகங்களுக்கு அரேபிய மாலுமிகள் வந்தனர்.

*பிரதேச செயலகம், வாழைச்சேனை*

அதில் ஏற்றுமதி செய்யும் துறைமுகங்கள் கோமாரி, சன்வு காகுலி, காளாஞ்சி என அந் நூல் கூறுகின்றது. கோமாரி என்ற பெயர் மாற்றமின்றி இன்றும் வழங்கி வருகின்றது. "காளாஞ்சி" என்பது "களுவாஞ்சி" எனப்படுவதாக இருக்கலாம். "சன்வு, காகுலி" என்பன அடையாளம் காண்படவில்லை.

மேலும் இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்தன் "ஸ்பில் போர்க்கன்" 31.05.1602 மட்டக்களப்புத் துறைமுகத்தில் இறங்கியபோது மட்டக்களப்பு சுதேசிகள் துறைமுகத்திற்கு அருகில் கப்பல்களை கட்டிக் கொண்டிருந்ததை கண்டதாக குறிப்புக்கள் உள்ளன. இதனை விளக்கும் வகையில் போர்த்துக்கேய "பாதிரி குவிறோஸ்" குறிப்புக்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்படி மட்டக்களப்பு துறைமுகம் குடாக் கடலாக அமைந்துள்ளது எனவும், கடலில் இருந்து வாவிக்குச் செல்லும் வழி ஆழமானது எனவும் வாவியின் ஓரங்களில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்தனர் எனவும் வாவியினூடாக புளியந்தீவினை அடைந்து அங்கு பொருட்களை இறக்க வசதிகள் செய்யப்பட்டிருந்தன எனவும், இறங்கு துறைக்கு அருகில் ஒல்லாந்தர் பெரியதொரு பண்டகசாலையை கட்டியிருந்தனர் எனவும் அங்கு பொருட்கள் சேகரிக்கப்பட்டிருந்தன என கூறுவது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் கப்பல் போக்குவரத்தினை எடுத்து நோக்குகையில் 1888ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 29ம் திகதி அன்றைய அரசாங்கம் முதன் முறையாக தீவைச் சுற்றிலும் ஒரு கப்பல் சேவையை ஆரம்பித்து வைத்தது இதன் படி கொழும்பில் இருந்து புறப்படும் கப்பல்கள் காலி, அம்பாந்தோட்டை கல்குடா, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் தங்கி மீண்டும் கொழும்பு திரும்பின.

இவ்வாறான கப்பல் போக்குவரத்து சேவைக்கு முதன் முதலாக இலங்கையில் உபயோகிகப்பட்ட கப்பல் இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்ட "லேடி கோர்டன்" கப்பலாகும். இதைத் தொடர்ந்து 300 தொன் எடையுள்ள இன்னும் பல கப்பல்கள்சேவைக்கு அமர்த்தப்பட்டன. அவற்றில் தமிழருக்குரிய கப்பலாக "மாருதப் புறவீகவல்லி" காணப்படுவதும் 1897 ல் மட்டக்களப்புக்கு மேற்கே உள்ள கடலில் பாறையில் மோதி விபத்துக்குள்ளாகி லேடி கோர்டன் 1907ம் ஆண்டு கற்குடாவுக்கு அருகே சூறாவளி நிமிர்த்தம் சேதமான "லேடி ஹெப்லொக்" கப்பல் மற்றும் 1926ம் ஆண்டு கல்குடா துறைமுகத்தை விட்டு வெளியேறியபோது விபத்தான "லேடி மக்ரம்" போன்ற பல கப்பல்கள் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. ***(இது பற்றிய ஆய்வுகள் அவசியம்)***

மட்டக்களப்புக்கும் ஏனைய இடங்களுக்குமான கப்பல் போக்குவரத்து எனும்போது போர்த்துக்கீசர் காலத்தில் கோவா போன்ற இடங்களிலிருந்து கிழக்கிந்திய கம்பனி நடைமுறையில் இருந்த காலத்தில் கட்டிடப் பொருட்கள் ஓடு முதலியன இந்தியாவிலிருந்து கடல் மூலமே வரவழைக்கப்பட்டு "உரு" என்றழைக்கப்படும் சிறு கப்பல்கள் மூலம் முகத்துவாரம் ஊடாக கச்சேரியை அண்மித்து வந்து, தற்போது நூலகம் அமைந்திருக்கும் பகுதியில் பொருட்களை இறக்குவது வழக்கம். அங்கு நிலை கொண்டிருந்த சங்கிலி கட்டப்பட்டிருக்கும் சாதனம் இப் பொருட்களை கரைக்கு தூக்கி வைக்கும் சாதனமாகும். இந்த ஏற்றி இறக்கும் இடம் "றேகடி" என அழைக்கப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து ஏனைய இடங்களுக்கான கப்பல் போக்குவரத்து எனும்போது மட்டக்களப்பிலிருந்து புறப்படும் சிறு கப்பல் காத்தான்குடி, ஆரையம்பதி, மண்முனை, அம்பிளாந்துறை, களுதாவளை, பட்டிருப்பு, மண்டூர் ஆகிய இடங்களை கடந்து கிட்டங்கி எனும் இடத்தை அடையும். அங்கு கப்பல் வந்த விடயத்தை வணிகர்களுக்கு அறிவிக்க "சங்கு ஒலி" போன்ற பெரியதொரு ஒலி எழுப்பப்பட்டவுடன் வணிகர்கள் தமது வியாபார பொருட்களைக் கொண்டுவந்து சேர்ப்பார்கள் இவ்வகையில் அவர்களால் மான் கொம்பு, மான்தோல், யானைத் தந்தம் சித்தமட்டி பேரமட்டி பேய்ப்புடலை பற்படாகம் அணுங்கு ஓடு, முள்ளம் பன்றி முள், என்பன ஏற்றப்படும்.

இக்கப்பல் சேவையினை 1891ம் ஆண்டு "ஒகிரெடி" என்பவர் ஆரம்பித்தார். என "மத்திய கிழக்கிலிருந்து மட்டக்களப்பு வரை" எனும் நூலில் அதன் ஆசிரியர் ஏ.மஜீத் குறிப்பிடுவது நோக்கத் தக்கது. அவ்வாறான கப்பல் சேவையின் ஊடாக கல்முனை கிட்டங்கியிலிருந்து மட்டக்களப்பிற்கு கொண்டுவரப்பட்ட பொருட்களுடன் நெல், அரிசி, வைக்கோல், தேங்காய், கொப்புறா, நெய், முதலிய பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் யாழ்ப்பாணத்திற்கும் அங்கிருந்து தமிழ் நாட்டுக்கும் சென்றன.

அடுத்து மட்டக்களப்பின் வடதிசையின் கல்குடா துறைமுகம் பற்றி எடுத்து நோக்குகையில்அதனை ''வாழைச்சேனை ஸ்ரீ கைலாய பிள்ளையார் ஆலய வரலாறு" எனும் நூலில் அதன் ஆசிரியர் திருமதி சி.ப. தங்கத்துரை குறிப்பிடுவது நாம் கூறுவதன்படி ஈழ நாட்டின்கிழக்குத் திசையில் இந்து சமுத்திராதேவியின் அலைக்கரங்கள் அலசி விளையாடும் கற்குடா இயற்கைத்துறைமுகம் உள்ளது. இத்துறைமுகத்தின் வழியாகவே கிழக்கு மாகாணத்தின் வியாபார போக்குவரத்துகள் அரசியல், குடியேற்ற

போக்குவரத்துக்கள் கிராமத்தின் பல்வேறு அபிவிருத்திகளும் நடைபெற்றன. அக்காலத்தில் இத்துறைமுகம் கிழக்குமாகாணத்தின் சிகரம் போல விளங்கியது.

ஆரம்பகாலத்தில் சீனர்கள் கற்குடா துறைமுகத்தில் வந்திறங்கி அங்குள்ள வாடி வீட்டில் தங்கியிருந்து தரமான பட்டு பருத்தித் துணிகளையும் வாசனைத் திரவியங்களையும் பொம்மை முதலிய விளையாட்டுப் பொருட்களையும் வேறு பாவனைப் பொருட்களையும், வீடு வீடாகச் சென்று வியாபாரம் செய்து வந்தனர். இதற்கு முன் சீன பல் வைத்திய பெண்கள் வீடு வீடாகச் சென்று பல் வைத்தியம் செய்த செய்தி செவி வழிச் செய்திகளுடன் தனது பெற்றோர் கூறிய செய்திகளையும் இங்கு குறிப்பிடுவது நலம் என ஆசிரியர் கூறுகின்றார்.

மேலும் இந்தியா முதலிய அயல் நாடுகளிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பல வகையான வியாபார பொருட்களை ஏற்றிக் கொண்டு "உருக்கள்" என அழைக்கப்படும் பெரிய அளவிலான பாய்த் தோணிகள் கல்குடா துறை முகத்தின் மூலமாக மாதுறு ஓயா ஆற்றின் வழியே வந்து வாழைச்சேனை தபாற்துறையில் தங்கி, ஏற்றி, வந்த பொருட்களை இறக்கி இங்கிருந்து தேங்காய், கொப்பரா, மான் தோல், மரங்கள், நெல் அரிசி சோளம், பசுநெய், தேன், யானைத்தந்தம், மரப்பலகை தளபாடங்களையும் ஏற்றிச் செல்லும் எனக் கூறுவதுடன் உருக்களில் தேங்காய்களை ஏற்றுவோர் வரிசையாக ஆற்றங்கரையில் நின்று ஒருமித்த குரலில் "ஏலேலோ..." என்று ஒலி செய்ய உருக்களில் தேங்காய்களை எறியும் காட்சியை சிறுவர்கள் ஆவலுடன் கண்கொட்டாமல் பார்த்து நின்று ரசிப்பர் எனவும்; அத்துடன் ஆறெங்கும் தினமும் மீன்பிடி வள்ளங்களிலிருந்த சிறு சிறு தோணிகளிலிருந்து எழும் இரவு நேர வெளிச்சங்களும், பகல் வேளை போக்கு வரத்துக்களும், ஆற்றையே அலங்கரித்துக் காட்டும் என்கிறார்.

எனவே மட்டக்களப்பு மாவட்டம் துறைமுகங்களையும் கப்பல் போக்குவரத்துக்களையும் கொண்டு காணப்பட்டமையினை உணரக் கூடியதாகவுள்ளது.

திரு. கே.எஸ். ஆர். சிவகுமார்
கலாசார உத்தியோகத்தர்
கிரான் – நிரந்தரம்
வாழைச்சேனை – தற்காலிக இணைப்பு

15.12.2010

# கோறளைப்பற்றுப் பிரதேச வெளியீட்டு முயற்சிகள்



பல நூற்றாண்டுகால ஒரு இனத்தின் வரலாறு – பண்பாடு போன்றவற்றை பதிவு செய்து கொள்பவை – அவ்வக் காலங்களில் எழுதப்படுகின்ற – வெளியிடப்படுகின்ற நூல்களும் - இலக்கியங்களுமே என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்திராது. நாம் படிக்கின்றோமோ இல்லையோ? நமது காலத்தில் படைக்கப்படுகின்ற இலக்கியங்களும் - நூல்களும் தான் நம்முடைய எதிர்காலத்தைப் படைக்கின்றன.

நவீன சமூக-இலக்கிய வளர்ச்சியில் நூல்களின் பங்கு மிக முக்கியமானது. உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்கள் தத்தம் கால வரலாறுகளைப் பதிவு செய்வது காலத்தின் தேவையாகவுள்ள இக்காலகட்டத்தில் இச்சிறு கட்டுரை வாயிலாக நமது கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள நூல்வெளியீடுகள் பற்றிய பதிவொன்றினைக் காண்போம்.

அச்சகங்கள், பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், நூல்வெளியீடு, நூல் விற்பனை, என்பன நம்மத்தியில் குறைந்த அளவில் இருப்பினும், 1958 காலப்பகுதியிலிருந்து ஏறத்தாழ அரைநூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக நமது பிரதேசத்தில் நூல்கள் வெளியிடப்பட்டு வந்துள்ளன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் இதுவரையில், ஐம்பதுக்கு மேற்பட்ட வெளியீடுகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன எனும் செய்தியானது எத்தகையதொரு வளர்ச்சியை நாம் அடைந்திருக்கின்றோம் என்பதைப்பற்றி சற்றுச் சிந்திக்க வைக்கின்றது. அவற்றிலும் பெரும்பாலான வெளியீடுகள் பாடசாலைகள் சார்ந்த கல்விப்புல சஞ்சிகை, நூல் வெளியீடுகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, பிரதேச நூல்வெளியீட்டு முயற்சிகளில் நமது கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு வருகின்றது. அத்தோடு ஓரிரு இலக்கிய நூல், இதழ் வெளியீடுகளும் இடம்பெற்றுள்ளன அவை பற்றிச் சுருக்கமாக நோக்குவோம்.

கிடைக்கப்பெற்றுள்ள வெளியீடுகள்,

1. பாடசாலை மற்றும் கல்விக்கள வெளியீடுகள்
2. அரச மற்றும் சமூக நிறுவனஞ்சார் வெளியீடுகள்
3. ஏனைய சமய, இலக்கிய வெளியீடுகள்

என மூன்று பிரிவுகளில் காண்போம்.

## 01. பாடசாலை மற்றும் கல்விக்கள வெளியீடுகள்

### மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி: (1958 முதல்)



கிடைக்கப்பெற்றுள்ள நூல்களுள் காலத்தால் முந்திய நூலாக, 1958இல் வெளிவந்துள்ள 'வாழ்மதி' எனும் சஞ்சிகை குறிப்பிடத்தக்கது. இன்றைய வாழைச்சேனை இந்துக்கல்லூரி, வாழைச்சேனை அரசினர் சிரேஸ்ட பாடசாலை எனும் பெயருடன் விளங்கியபோது இவ்வெளியீடு நிகழ்ந்துள்ளது. இச்சஞ்சிகையே தற்போது கிடைக்கப் பெற்றுள்ளவற்றுள் வாழைச்சேனையில் வெளிவந்த முதலாவது நூலாகவுள்ளது. அதன்பின்னர், 1980இல் கையெழுத்துப் பத்திரிகையாக 'செவ்வாழை' எனும் பெயரில் ஒரு வெளியீடு இங்கே நடைபெற்றுள்ளது. தொடர்ந்து 'செவ்வாழை' ஆறு இதழ்கள் அச்சில் வெளிவந்துள்ளன.




அத்தோடு, '2005' ஆம் ஆண்டில் கல்லூரியின் 'தமிழ் இலக்கிய மன்ற'த்தின் ஓராண்டு நிறைவையொட்டி 'மகூலம்' எனும் சிறப்பிதழும் வெளியிடப்பட்டது.



அத்தோடு, கல்லூரியின் முன்னாள் அதிபராக விளங்கிய திரு.மு.தவராஜா அவர்களது 'மறைமுகம்', 'மறுபக்கம்' எனும் இரண்டு சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் 'மறைமுகம்' சிறுகதைத் தொகுப்பு 2003ஆம் ஆண்டு கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப்பேரவையினராலும், 'மறுபக்கம்' சிறுகதைத் தொகுப்பு 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் பேரவையினால் வெளியிடப்பட்டது. இவ்விரண்டு தொகுப்புக்களும் கலாநிதி. செ.யோகராசா அவர்களினால் பாராட்டப்பெற்றவை என்பதும் இவ்விடத்தில்





குறிப்பிடவேண்டியுள்ளது. இவை தவிர, இங்கு கற்பித்த ஆசிரியர்களான திருமதி.அருந்ததி சுந்தரமூர்த்தி ஆசிரியை அவர்களால் 'மருங்கை' (2004) எனும் சிறுவர் பாடல்தொகுதியும், திரு. இ.ரவிச்சந்திரன் அவர்களின் 'ஆரியச்சக்கரவர்த்திகால தமிழ் இலக்கியம் ஒரு பகுப்பாய்வு'(2004) எனும் நூலும் வெளியிடப்பட்டன.



இவ்வாறான வெளியீடுகளுக்கு நடுவே, அவ்வப்போது தனிச்செயற்றிட்டங்களுக்காக மாணவர்களினால் பல்வேறு வகையான படைப்புக்கள் வெளியிடப்படுகின்றன. அவற்றில் பல தரமான படைப்புக்கள் வெறுமனே பாடசாலை நூலகத்துடன் முடங்கி விடுவது வருத்தத்திற்குரியது. பெரும்பாலும் இவ்வாறான வெளியீடுகள் க.பொ.த.உயர்தரம் கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளில் அதிக அளவில் வெளியிடப்படுகின்றன. குறைந்தளவு பிரதிகளுடன் வெளியிடப்படும் இத்தகைய படைப்புக்களை கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப்பேரவை அவ்வப் பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு இரு பிரதிகளேனும் பெற்று அவற்றை ஆவணப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். இந்துக்கல்லூரியில் மாணவர்களினால் வெளியிடப்பெற்றவற்றுள் எஸ்.ஏ.ஸ்ரீதரின் 'தனித்திருக்கிறான் ஒரு தமிழன்' – கவிதைத் தொகுப்பு (2003), க.தினேஸ் எழுதிய 'வேலி' – சிறுகதைத் தொகுப்பு (2007) போன்றவை குறிப்பிடத்தக்கது. (ஏனைய வெளியீடுகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறாமையினால் அவை பற்றிக் குறிப்பிட இயலவில்லை).








இத்தரவுகளின் அடிப்படையில் வாழைச்சேனை இந்துக்கல்லூரி பிரதேச இலக்கிய, நூல் வெளியீட்டு வளர்ச்சியில் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பினை ஆற்றி வருகின்றமை கவனிக்கத்தக்கது.

## மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம்



‘புத்தொளி’ எனும் சஞ்சிகை, வருடத்திற்கொன்றென 1996 இலிருந்து 2001 வரை வெளிவந்துள்ளது. இவை திரு.க.தவராஜா அவர்கள் அதிபராக விளங்கிய காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. தற்போதும் ‘புத்தொளி’ வெளிவருவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்ற விடயம் குறிப்பிடத்தக்கது.





‘புத்தொளி’ தவிர, இங்கும் தனிச்செயற்றிட்டங்களுக்காக பல்வகைப் படைப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் பி.லுவிகரன் தொகுத்து வெளியிட்ட ‘அழுவம்’ எனும் கவிதைத் தொகுப்பு குறிப்பிடத்தக்கது. களரி எனும் பத்திரிகை வெளிவருகிறது.

## மட்/விநாயகபுரம் விநாயகர் வித்தியாலயம்



கோறளைப்பற்றுப் பிரதேச பாடசாலைகளுள் வெளியீட்டு முயற்சியில் பாராட்டப் படவேண்டிய பாடசாலை. இங்கிருந்து ‘அருவி’ எனும் சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மட்/கல்குடா நாமகள் வித்தியாலயம்



1886இல் தொடங்கப்பட்ட இப்பாடசாலையில் இருந்து 120 வருடங்களுக்குப் பின்னர், ‘கலையரசி’ எனும் சஞ்சிகை 2007இல் வெளியிடப்பட்டது.

## மட்/சுங்கான்கேணி அ.த.க.பாடசாலை



2007இல் ‘ஓடை’ எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது.



## மட்/கல்மடு விவேகானந்தா வித்தியாலயம்

2007இல் 'முகுள்' எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

## மட்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம்



தாழை சஞ்சிகை 2010 ஆம் ஆண்டு முதலமைச்சர் நிதி அனுசரணையுடன் வெளிவந்துள்ளது.

ஏனைய பாடசாலை வெளியீடுகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறாமையினால் இக்கட்டுரையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

# 02. அரச, மற்றும் சமூக நிறுவனஞ்சார் வெளியீடுகள்


## வாழைச்சேனை காகித ஆலை

வாழைச்சேனை காகித ஆலையிலிருந்து அங்கு வேலைசெய்த ஊழியர்களினால் பல்வேறு காலப்பகுதிகளில் சஞ்சிகைகள் வெளியிடப்பெற்றுள்ளன. 1965இல் 'வண்ணம்' எனும் கையெழுத்து சஞ்சிகையும், 1966இல் 'எழில்' எனும் கையெழுத்து சஞ்சிகையும் வெளிவந்துள்ளன. இவை தவிர, 'காகித மலர்' எனும் சஞ்சிகையும் இங்கிருந்து வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் ஒன்றியம்

சர்வதேச ஆசிரியர் தினங்களில் சிறப்பு வெளியீடாக 'ஆசிரிய தீபம்' எனும் சஞ்சிகை இவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. 1991, 1994, 1995/1996களில் வெளிவந்த சஞ்சிகைகள் மட்டுமே எமக்குக் கிடைத்துள்ளது.

## கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவை



எமது கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்பெற்று வரும் 'முத்தமிழ் விழா'க்களில் 'இளம்பரிதி' எனும் சிறப்புச் சஞ்சிகையும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இதுவரை 2000, 2001, 2003, 2004, 2005, 2006, 2007ஆம் ஆண்டுகளில் இதுவரைக்கும் ஏழு 'இளம்பரிதி' சிறப்பு மலர் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








இவை தவிர, கலாசாரப் பேரவையினால் சிறுகதைப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்ட போது 'தெரிவுசெய்யப்பட்ட சிறுகதைகள்' எனும் பெயரில் கலாநிதி செ.யோகராசா அவர்களினால் தொகுத்தளிக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்பும், திரு.மு.தவராஜா (முன்னாள் இந்துக்கல்லூரி அதிபர்) அவர்களின் 'மறைமுகம்'(2003) சிறுகதைத் தொகுப்பும், கலாநிதி.செ.யோகராசா அவர்களினால் தொகுத்தளிக்கப்பட்ட 'ஈழத்து சிறுவர் அறிவியல் பாடல்கள்'(2003) எனும் சிறுவர் பாடல்தொகுப்பும் வெளியிடப்பட்டுள்ளன.

## சீகோ முகாமைத்துவக்கல்லூரி




நமது பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்த கணினிக் கற்கை மற்றும் கணினி - கணினி உதிரிப்பாக விற்பனை நிலையமாக விளங்கிய இவர்கள் தமது 2004இல் தமது நிறுவன ஆண்டு விழாவையொட்டி மாபெரும் பரிசளிப்பு விழா ஒன்றினை நடாத்தினர். அவ்வேளையில் எஸ்.ஏ.ஸ்ரீதரின் 'சங்கத்தமிழ் சிறுகதைகள்' எனும் சிறுகதைத் தொகுப்பு நூலினை வெளியிட்டனர்.

## ஏசியன் கொம்ப்யூட்டர் சென்டர்





திரு.மணி ரஞ்சன் அவர்களினால் நடத்தப்பட்டு வருகின்ற கணினிக்கற்கை நிறுவனத்தினால் பிரதேச அளவில் பல்வேறுபட்ட கலை, இலக்கியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. நாடகப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கணினி மற்றும்

கல்விக் கருத்தரங்குகள், கண்காட்சிகள் போன்றவற்றை நடாத்தி வருகின்ற இவர்கள் 2005ஆம் ஆண்டிலிருந்து 'ஸ்டுடண்ட்' எனும் பெயரில் கல்விச் சஞ்சிகை ஒன்றினையும் வெளியிட்டு வருகின்றனர்.

## வாழைச்சேனை கிறிஸ்தவ வாலிபர் சங்கம் (YMCA)



சமூக மற்றும் தனிமனித அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வருகின்ற இவர்கள், உலகை உலுக்கிய மாபெரும் மனிதப் பேரழிவான 'சுனாமி' நினைவு மலர் ஒன்றினை 2006இல் வெளியிட்டனர். 'கானல் நீராகும் விழுமியங்கள்' எனும் பெயரில் வெளிவந்த இம்மலரில் பிரதேச மற்றும் மாவட்ட எழுத்தாளர்கள் பலரது படைப்புக்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## பாரதி கல்வி வட்டம்



தனியார் கல்வி நிறுவனமாக பல ஆண்டுகளாக நமது பிரதேச கல்வி வளர்ச்சியில் பெரும்பங்காற்றி வரும் இக்கல்வியகம் பல படைப்பாளிகளை மட்டுமல்லாது நூல்களையும் நமது பிரதேசத்திற்கு தந்து கொண்டிருக்கின்றது. அவற்றுள் இக்கல்வியக நிறுவனர் திரு.எ.த.ஜெயரஞ்சித் அவர்களும் எஸ்.ஏ.ஸ்ரீதரும் இணைந்து எழுதித் தொகுத்து வெளியிட்ட 'ஈழத்துத் தமிழிலக்கியத்தில் இவர்கள்' எனும் நூல் 2006இல் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இக்கல்வியக நிறுவனர், சிறு பிரசுரங்களாக பல கல்விசார் வெளியீடுகளை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூழல் மன்றங்கள்



திரு.சி.இளங்கோவன், திருமதி. இளங்கோவன் சுலோஜினி ஆகியோர் 'பசுஞ்சோலை' எனும் பெயரில் 2008இல் அரையாண்டு சுற்றாடல் சஞ்சிகை ஒன்றினை அடுத்து பிரதேச இலக்கிய, வெளியீட்டு முயற்சிகளில்

வெளியிட்டனர். இவர்கள் 'சுனாமி' எனும் நூலினை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




## 03. ஏனைய வெளியீடுகள்:

### சமயஞ் சார்ந்த வெளியீடுகள்:




இவ்வகையில் 1998 இல் திருமதி.சி.ப.தங்கத்துரை அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட 'ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வரலாறு' எனும் தலவரலாற்று நூல் குறிப்பிடத்தக்கது. ஆலய வரலாறு மட்டுமன்றி, வாழைச்சேனையின் ஆரம்ப கால வரலாற்றினையும் கூறுகின்ற இந்நூல் பிரதேச வெளியீடுகளில் குறிப்பிடத்தக்கது.




அடுத்து, திரு.யோ.சிவகுமார் அவர்கள் 2008இல் வெளியிட்ட 'அகல்' எனும் இந்துசமய காலாண்டு சஞ்சிகை குறிப்பிடத்தக்கது. இவை தவிர, திரு.முத்துமாதவன் அவர்களாலும் சில சமயஞ்சார் நூல்வெளியீடுகள் இடம்பெற்றிருக்கின்றன என்கின்ற தகவலையும் இங்கே தருகின்றோம். நூல்கள் கிடைக்கப்பெறாமையால் அவைபற்றிய விபரங்கள் தரமுடியவில்லை.

### இலக்கிய வெளியீடுகள்

பிரதேசத்தின் மூத்த எழுத்தாளரும் நாடகக்கலைஞருமான கலாபூஷணம், திரு.தாழை செல்வநாயகம் அவர்களது, பரிசுபெற்ற பல்வேறு சிறுகதைகளைக் கொண்ட 'ஏதிலிகள்' எனும் சிறுகதைத் தொகுப்பு 2008இல் வெளியிடப்பட்டது. மணிமேகலைப் பிரசுரத்தினரால் இச்சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவரது நாடக நூலான 'ஈழம் வருகிறான் பாரதி 2009ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. 2010ல் வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள் என்ற நூல் வெளியிடப்பட்டது.






ஈடுபட்டு வரும், எஸ்.ஏ.ஸ்ரீதரின் 'தமிழன் குரல்' எனும் சஞ்சிகை 2004, ஏப்ரலில் வெளிவந்துள்ளது. பின்னர் தொடர்ந்து, 'இலக்கியா' எனும் பெயரில் 2004ஆம் ஆண்டில் மே, ஜுன், ஜுலை மாதங்களில் தொடர்ந்து 04 இதழ்கள் வெளிவந்தது. பின்னர் 2005 ஒக்டோபரில் இருந்து 2006 ஏப்ரல் வரை 'இலக்கியச் சிந்தனை' எனும் பெயரில் 04 இதழ்கள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. ஏலவே, இவரது 'தனித்திருக்கிறான் ஒரு தமிழன்' கவிதைத் தொகுப்பு (2003), சங்கத்தமிழ் சிறுகதைகள் - சிறுகதைத்தொகுப்பு (2004), ஈழத்துத் தமிழிலக்கியத்தில் இவர்கள் (2006) போன்ற நூல்கள் வெளிவந்துள்ளமை பற்றி மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.




12 கிராமசேவகர் பிரிவுகளையும் சுமார் 25 ஆயிரம் பேர் சனத்தொகையையும் கொண்ட கோறளைப்பற்று பிரதேசத்தில் கடந்த அரைநூற்றாண்டு காலமாக இடம்பெற்று வந்த நூல்வெளியீட்டு முயற்சிகள் பற்றிய தரவுகளை இதுவரை பார்த்தோம். ஆனாலும் இந்த வளர்ச்சி போதுமானதாக இல்லை. அதற்கு அச்சக வசதியின்மை, மக்களிடையே வாசிப்பு பற்றிய விழிப்புணர்வின்மை போன்ற பல காரணங்கள் கூறப்பட்டு வந்தாலும் இனிவருகின்ற காலங்களில் எமது பிரதேச கலை, இலக்கிய வளர்ச்சிக்கு அனைவரது பங்களிப்பும் இன்றியமையாதது என்பது மிக முக்கியமானது.




இவை தொடர்பான கருத்தாடல்கள், கருத்தரங்குகள் பிரதேச படைப்பாளிகள், வாசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் நடைபெற வேண்டும். நல்லதொரு எதிர்கால சந்ததியினை உருவாக்க நாம் எல்லோரும் ஒன்றுகூடி உழைக்க வேண்டும். கல்வியாளர்களும் புத்திஜீவிகளும் பெருகிக் கொண்டு வரும் நமது பிரதேசத்தில் தற்போது கலை - இலக்கிய விழிப்புணர்வு என்பது காலத்தின் தேவையாகவுள்ளது. அதனை இதுபோன்ற நூல் மற்றும் சஞ்சிகை வெளியீடுகள் தான் உண்டுபண்ண முடியும்.





# மெய்ஞானத்தில் விஞ்ஞானம்

மெஞ்ஞானத்துள் மறைந்துள்ள உண்மைகளை மதிநுட்பத்துடன் ஆராய்கின்றபோது மயக்கம் தெளிகின்ற வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றது.

ரோஜா மலரினை ஆராயும் ஒரு விஞ்ஞானியின் காட்சியும் அனுபவமும், அவதானமும், வாய்ப்புக்களும், அனுமானமும் அவற்றின் மூலமாக அவர் காணும் அதிசயங்களும் அதனில் அவர் கொள்ளும் ஆர்வத்தையும் நம்மால் அனுபவிக்க முடியாது.

அவ்வாறு இருக்கையில் இப் பிரபஞ்ச உண்மைகளையும் அதன் ரகசியங்களையும் அதற்குரிய மெஞ்ஞான தன்மைகளையும் சாதாரண மக்களாகிய அல்லது சாதாரண நிலைக்கு சற்று கீழ் மட்டத்தில் வாழும் எம்மால் இலகுவாக புரிந்து கொள்ள முடியுமா?

ஆரியப்பட்டா எனும் மெஞ்ஞான வானியல் நிபுணர் பூமி உருண்டை என்றும் அது தனது அச்சில் ஒரே மாதிரியாக சுழல்கிறது என்பதனையும் நிக்லஸ் கொப்பனிக்கல்ஸினுக்கு முன்பே கூறிவிட்டார்.

பாஸ்கர ஆச்சார்யா உலகு உருண்டை வடிவமானது எனினும் பார்வைக்கு அது தட்டையானதாய் உள்ளதற்கும் விளக்கம் தருகிறார். அவர் புவியீர்ப்பு சக்தி தத்துவத்தை "சித்தாத்தசீரோன்மணியில்" விளக்குகிறார் என்றும்.

காளிதாசர், சந்திரன் தனதொளியை சூரியனிடம் பெறுகிறது என்றும் சந்திரகிரகணம் என்பது பூமியின் நிழல் சந்திரனில் விழுவது என்பதையும் ரகுவம்சம் எனும் காவியத்தில் எடுத்துரைக்கின்றார்? தற்கால விஞ்ஞானிகளுக்கு முன்பு நமது இந்து ஞானிகள் எந்தக் கருவியால் இவற்றை கண்டார்கள்; எனவே மூன்றாம் கண்ணாகிய ஞானக்கண் அவர்களிடம் இருந்தது வியப்பல்ல.

மெஞ்ஞானிகள் அவ்வப்போது உலகின் அமைப்பையும் உயிர்களின் தன்மையினையும் இயற்கையின் தன்மையினையும் அதில் ஏற்படும் தொடர் மாற்றங்களையும் தமது அனுபவித்திற்குட்படுத்தி உள்ளுணர்வு தன்மையால் சொல்லி வைத்தனர்.

விஞ்ஞானிகள் பரிசோதனைகள் மூலம் மீண்டும் மீண்டும் வாய்ப்பு பார்த்து முடிவுகளை எழுத்துமூலம் வெளியிடுகின்றனர்.

விஞ்ஞானிகளின் முடிவு காலத்தால் மாற்றம் பெற மெஞ்ஞானிகளின் முடிவு மாறாமல் இருக்கிறது.

ஐன்ஸ்டின் தனது இறுதிக் காலத்தில் இவ்வாறு கூறினார். ''என்னுடைய கடைசிக் காலத்திலேயே பகவத்கீதையினை படிக்க முடிந்தது. முன்னர் படித்திருநதால் எனது ஆராய்ச்சியில் புதிய பரிமாணங்களை உருவாக்கியிருக்க முடிந்திருக்கும்."

நாகசாயி, ஹிரோசிமா ஆகிய ஜப்பான் நாட்டு நகரங்களில் 1945 இல் அணுகுண்டுகள் வெடித்தபோதே உலகம் அணுவெடிப்பின் தாக்கத்தை அறிந்து கொண்டது.

''ஆனால் அணுவைத் துளைத்து ஏழ் கடலை புகுத்தி
குறுகத் தறித்த குறள்"
என்று ஈராயிரம் வருடங்களுக்கு முன்பே இந்துக்கள் திருக்குறளிற்கு விமர்சனம் செய்தனர்.
இவர்களது காட்சிதான் யோகக்காட்சி.

அணுவிலே இருக்கும் புரோத்திரன், இலத்திரன், நியூத்திரன் ஆகியன முறையே நேர், எதிர், நடுநிலை மின்துகள்கள் ஆகும். அணுக்களின் கட்டமைப்பே இவ்வுலகும் பிரபஞ்சமும் அவற்றின் அசைவும் அதனால் உருவாகும் அடுத்த கட்டமைப்பும் தான் மாற்றம் எனப்படுகிறது. இவை மூன்றினையும் நம்மவர் சொன்ன சாத்வீக, ராஜஸ, தாமஸ குணங்களோடு ஒப்பீடு செய்கின்றார்கள்.

விதிப்படி மூன்று குணங்களும் அணுவில் இருந்தால் அது அணுக்கட்டமைப்பு. இக் கட்டு மாறும்போது அணு அழியும் அல்லது அபிவிருத்தி அடையும்.

இதுவே படைத்தலும் காத்தலும் அழித்தலும்.
வயிறும் நெஞ்சும் தலையும்.
ஆரம்பிப்பதும் நடாத்துவதும் மாற்றுவதும்.
பிரம்மாவும் விஸ்ணுவும் உருத்திரனும்,

நாபிக்கமலம் பாற்கடலும், ஊழித் தாண்டவமும் பிரபஞ்ச ஆரம்பமும், அதன் ஒடுக்கமும் பரிணாம வளர்ச்சியும்.

சித்தர்களும் இதனைக் கண்டனர்.
ஞானிகளும் அதனை உணர்ந்தனர்.
விஞ்ஞானிகள் அறிந்ததும் இதுவே.

காபன் மூலக்கூற்று கட்டமைப்பு விஞ்ஞானிக்கு கனவிலே, தோன்றியதும், ஆக்கிமிடிஸ் நிருவாணமாய் ஓடியதும், ஞானமே எல்லாமே அணுக் கட்டமைப்பின் உள்ளும் புறமும் உள்ளவையும் அவற்றின் மாற்று அசைவுகளுமேயாகும்.

இராமகிருஸ்ண பரமகம்சரின் வெற்றுடல் அவரது உயிர் பிரிந்த பின்பும் அவர் கூறியதுபோல் பழுதடையாமல் இருந்தது. அதுதான் அவருக்கு இருந்த உயரிய ஆத்மாவின் பக்குவம். முதிர்ந்த விதை முளைக்கவே காத்திருக்கும். தட்பவெப்பம் சரியானால் மண்ணில் அது தானே முளைக்கும்.

இந்துக்கள் கீழைத்தேசத்தின் இயற்கை விஞ்ஞானிகள் ஆவர், அவர்கள் ஆத்மீக் விஞ்ஞானிகள், அதை அறிந்த அவர்களோடு வாழ்ந்த மேலை நாட்டோரின் ஆக்கிரமிப்பில் விளைந்தவைதான் இன்றைய அணு விஞ்ஞானமும், குவாண்டம் விஞ்ஞானமும் இலத்திரனியல் விஞ்ஞானமும் ஆகும்.

மதம் என்னும் பெயரால் மூடப்பட்டு ஆராயப்படாத அனுஷ்டானங்களை கடைப்பிடிக்கும் இடங்கள்தான் இந்து ஆலயங்கள்; எனச் சிலர் நினைத்திருந்தனர். முற் காலத்தில் அவைதானே இடிதாங்கிகள், பல் அடுக்கு மாடிகள் பிற்பாடுதான் வந்தன. பிரபஞ்ச தோற்றத்திற்கு சில வினாடிகள் இடம்பெற்ற பெரு வெடிப்பே காரணம் என்கிறார்கள். டாக்டர் ராபர்ட் வில்சன், டாக்டர் ஆர்னொ பெஞ்சியால் ஆகியோரின் மைக்ரோ ரேடியேசன் எனும் நுண்கதிர் இயக்கமானது பிரபஞ்சத்தில் செயற்படும் முறையினை ஆராய்ந்தனர். அவர்களின் சோதனையில் இனந்தெரியாத ரேடியோ அலைகள் கிடைத்தன. அவர்களது இடைவிடாத சோதனையால் அந்த அதிர்வு பிரபஞ்ச வெடிப்பில் ஏற்பட்ட ஓசை எனக் கூறினர். இதே ஒலியை இந்துக்கள் "ஓம்" எனும் பிரணவ மந்திரம் என்று எப்போதோ கூறிவிட்டனர்.

பிரமம் என்பது ராஜஸ், தாமஸ், சாத்வீக குணங்களை உள்ளடக்கிய பிரபஞ்ச அடக்கம் என்று அவர்கள் கூறினார்.

ஐஸ்டைன், வெளியும் காலமும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் என்றார். இந்துக்கள் இதனை மாயை என்றனர்.

''ஓம்'' காரம் உலக முதல் மொழியாகும் இதனையே கோயில் மணி நமக்கு உணர்த்தும். வெங்கலமணி ரசவாதத்தன்மையில் சரியாக வார்க்கப்பட்டால் பிரபஞ்ச ஆரம்ப ஒலியை நாம் மனங்குளிரக் கேட்கலாம்.

ரசவாதம் என்பது ஒரு சிறந்த கண்டுபிடிப்பு. பண்டைய இந்துக்கள் ராஜலோகம் என்னும் வார்ப்பு உலோகத்தினால் வானவூர்திகள் தயாரித்தனர்.

இந்த ராஜலோகத்தின் வார்ப்புகளின் உதவியால் பல்வேறு விமானங்களை அவர்கள் தயாரித்தனர். ''கிரி தந்த'' எனும் விமானப் பட்டியலில், 24 வகை விமானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சற்குண திரிபுர விமானங்கள் முதலியன சிறப்பானவையாக காணப்பட்டன. ஆலயத்திலும் விமானம் உண்டு. அதன்கீழ் உள்ள பகுதி கர்ப்பகிரகம். கர்ப்பகிரகத்தில் யந்திரத்தகட்டில் விக்கிரகம் இணைக்கட்டிருக்கும் அங்கே இருப்பவை வெறும் கற்களாய் இருக்கலாம் என்று நினைப்பவர்கள், ஒரு முறை பூசகரோடு சேர்ந்து அதனுள்ளே நின்று பாருங்கள், விமான அமைப்பானது பிரபஞ்ச சக்தியை ஆலயத்தினுள்ளே இழுத்துவிடும் சக்தி பொருந்தியது என்பது புலனாகும்.

ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு யோகிகளால் பிரதிட்சை செய்யப்பட்ட விக்கிரகத்தில், ஓதப்படும் முறையான மந்திரங்கள், ஆலயத்தைச் சூழவுள்ளவர்களையும் ஆகர்சிக்கும் சக்தியுடையவை. இவ்வாறே பூமி சாஸ்திரம், யோக சாஸ்திரம், வான சாஸ்திரம் எல்லாமே பிரபஞ்ச சக்தியினை மனித உடலுக்கு பரப்பும் சக்தியுடையவையாகும்.

சூரியக்கதிர் பிரிந்தால் ஏழுநிறம். அத்தனை நிறங்களையும் ஒரு பொருள் உறிஞ்சினால் அது கறுப்பு நிறம். இதனை விஞ்ஞான முறையால் பிரித்துக்காட்டினர். நாம் கிணற்றடியில் சவர்க்காரம் பூசும்போது வானவில் தெரியவில்லையா? தார் வீதியில் கொட்டிக் கிடக்கும் சில திரவங்களில் ஏழு நிறங்கள் பளிச்சிட வில்லையா? வானத்தில் மட்டுமா வில்வளைவு! இக் காட்சியினை அனுபவத்தில் எடுத்தவர் அரியத்தால் அதை ஊடுபாச்சி பிரித்துக் காட்டினார்.

ஆனால் பண்டைக் காலத்தில் சூரிய உதயம் தமது உடலுக்கு சக்தி தரக்கூடியது என்பதை உணர்ந்தஞானிகள் ''சூரிய நமஸ்காரத்தையே'' தமக்கு உடற்பயிற்சி ஆக்கினர். சூரியக்கதிரின் சிவப்பு உட்புறக்கதிர் காலையில் உடலுக்கு மிகவும் சக்தி தருவதாகும். பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னால் விஞ்ஞானமாக அல்லாது மெஞ்ஞானமாக இதனை இந்துக்கள் தெரிந்து வைத்தனர்.

நாசாவில் இன்றும் காணப்படும் விஞ்ஞானிகளில் சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெற்ற பிராமணர்களே அதிகம், அழிந்த மொழியை காப்பாற்றவா அவர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர். அல்ல, அந்த மொழியில் அடக்கப்பட்டுள்ள வேத மந்திரங்களில் அமிழ்ந்துள்ள உண்மை நெறிக்காகவே அவர்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளனர்.

கதவு திறக்கப்படாத வீட்டில் கதிரவன் ஒளி புகுவதில்லை. மனக்கதவு திறக்கப்படாத மனத்திலும் அருட் சக்தி படிவதில்லை.

கிழக்கின் விஞ்ஞானம் அடங்கிய மெஞ்ஞானமே மேற்கின் ஆராய்ச்சியின் விடி வெள்ளி: மூட நம்பிக்கைகள் நிலையான உண்மைக்கு போர்வையிட முடியாது. மூட நம்பிக்கைக்கு கொடுக்கப்படும் விளக்கமும் விஞ்ஞானமாகாது, விஞ்ஞானம் என்பது இருப்பதை விளக்குவதும், பெற்ற விளக்கத்தை துலக்குவதும், பயன்பாட்டிற்கு இலகுவான வழிமுறைகளாக அமைத்து கொள்வதும் ஆகும். இயற்கைப் பொருட்களை மாற்றம் செய்து கருவிப் பயன்பாட்டில் மக்களுக்கு விஞ்ஞானம் கிரகணங்களை பார்க்க கருவிகள் தரலாம். ஆனால் கிரகணத்தை இயற்கைதானே உருவாக்கும் அந்தந்த பிரபஞ்ச ரகசியங்களை தூல சூக்கும உடல்களால் அனுபவிப்பவர்கள்தான் மெஞ்ஞானிகள்.

அண்டத்தில் உள்ளது தான் பிண்டத்திலும். பிண்டத்திலுள்ளதுதான் அண்டத்திலும் என்பார்கள், இருப்பு மட்டங்களிலும் அலை வடிவங்களிலும் தான் மாற்றங்கள், அடிப்படையில் மாற்றங்கள் இல்லை, மெஞ்ஞானி எப்பொழுதும் அறிகின்றான், விஞ்ஞானி அறிவிக்கின்றான்.

''மனத்தின் கண் மாசு இலனாயின்'' - மெஞ்ஞானி

''வாய்ப்பு பார்த்தால்'' - விஞ்ஞானி

இந்து மெஞ்ஞானத்துள் - இனிக்கும் விஞ்ஞானம் அதிகம். ஆராய்ந்தால் அமைதி உடலில் பரவ உலகையே நிமிர்த்தலாம் ஆனால் ஜெனடிக் (கர்மா) இன் ஆளுமையைக் கடப்பதற்கு பயிற்சி அவசியம். தொடர் ஆன்மீகப் பயிற்சியினால் விஞ்ஞானத்தோடு கூடிய மெஞ்ஞானி ஆகலாம்.

உசாத்துணை :
1.கலாநிதி கிருஸ்ணராஜா சைவ சித்தாந்த அறிவாராட்சியியல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், மார்கழி 1975.
2.சாமி சிதம்பரனார் சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம் மணிவாசகர் வெளியீடு ஆகஸ்ட் 2001
3.கணேசன் பீ.சீ இந்தக்களின் விஞ்ஞானமும் இன்றைய விஞ்ஞானமும் நர்மதா வெளியீடு சித்திரை 2003
சொக்கலிங்கம் யு. சமய கிண்டர் கார்டன் அல்லது ஆலயங்களின் உட்பொருள் விளக்கம் கிருஸ்ணா பிரிண்டட்வேர்க்ஸ் ஆகஸ்ட் 1953.

**திரு.க.கண்டீபன்**
உதவி விரிவுரையாளர்,
இந்து நாகரிகம்
கிழக்குப்பல்கலைக்கழகம்
2008/2009



# திருக்குறளும் இன்றைய 5 S உபாயமுறையும்

## Concept of productivity improvement in Thirukkurall

நவீன கால முகாமைத்துவ சிந்தனையாளர்களுள் பலர் உற்பத்தித்திறன் விருத்தி பற்றிய சிந்தனையை விளக்கியுள்ளனர். அவர்கள் அனைவருமே பொதுவாக ஐரோப்பியர்களாக அல்லது அமெரிக்கர்களாக காணப்படுகின்றனர். திருக்குறளின் மூலமொழி தமிழாகும். இதுவும் முகாமைத்துவ கல்வி பயில்வோரும் முகாமையாளர்களும் படித்துப்பயன்பெறத் தக்க ஒரு சிறந்த நூலாகும். இதனால் மேலைத்தேய நாடுகள் திருக்குறளை தமிழில் மொழிபெயர்த்து பயன்படுத்தி வருகின்றன என்றாலும் அதனை நவீனகால முகாமைத்துவ நூல் வகைக்குள் அந்நாடுகள் உள்ளடக்கவில்லை. இந்தியா விலுள்ள மதுரை காமராசர் பல்கலைக் கழகம் முதலியவை அவற்றின் பொதுத்துறை நிருவாக முதுமாணி கலைத் திட்டத்தில் திருவள்ளுவரை 'நிருவாகச் சிந்தனையாளர்கள்' வரிசையில் உள்ளடக் கியிருக்கின்றன.

தமிழ்ச் சமூகம் அறிவினாலும் உழைப்பினாலும் உயர்ந்து விளங்கிய ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டது. இதன்காரணமாக அண்டை அயல்நாடுகள் தமிழரின் பொக்கிஷங்களை அபகரித்தன; அழித்தன; தமது அரசுகளை வலுப்படுத்த முனைந்தன. நிலைமை இவ்வாறிருக்க தமிழ் அரசர்களும் தமிழரை அழிப்பதைப் பெரிய வீரச்செயலாக எண்ணி சேரர்,சோழர்,பாண்டியர் என வேறுபட்டுநின்று இனத்தின் சனத்தொகையை நன்றாகக் குறைத்து இன்று பத்துக் கோடிப்பேர் வாழ்ந்தும் ஆள்புல இறைமையற்ற ஒரு இனமாக தமிழினத்தை ஆக்கினர். 'வீரம்' பற்றிய அதீதமான நம்பிக்கை தமிழரை சீரழித்ததென்றே கூறலாம்.

திருவள்ளுவர் எழுதிய 1330 குறள்களைக் கொண்ட திருக்குறளானது எந்தச் செயலையும் முறையாக ஒழுங்குபடுத்தி செய்யவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. போர் நடத்துவதற்குகூட அது வீரத்தை பெரிதுபடுத்தாது உபாயங்களையே விதந்துரைக்கிறது. அவ்வகையில் இயன்றவரை போரைத் தவிர்த்துக்கொள்வதே திருவள்ளுவரின் எண்ணமாக இருந்திருக்கிறது. திருக்குறளை இந்த உலகம் மதநூலாக அல்லது அறநூலாகப் பார்க்கிறது. அதனால் இதன் உள்ளடக்கம் இன்றைய எமது மக்களால் விளங்கிக் கொள்ளப்படாமல் விடுபடலாயிற்று. எம்மைப் பொறுத்தவரை இது முகாமைத்துவ நூல்களில் ஒன்று; அதனைப் படித்து அனைவரும் பயன்பெறவேண்டும்.

*பிரதேச செயலகம், வாழைச்சேனை*

இன்று சுமார் 80 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு உலகெங்கும் பயன்படுத் தப்படுவதாக கூறப்படுகின்றபோதிலும் தமிழரைப் பொறுத்தவரை அது ஒரு இந்துமத நூலாக நோக்கப்படு கின்றது. தமிழரின் நீண்ட, மதசார்பற்ற, சக்தி வாய்ந்த வரலாற்றின் நடுவே குறுக்கிட்டது ஆரியம். இதனால் எம்மவர் படைப்புக்களில் ஆரிய சிந்தனைகள் ஊடுருவி மக்களின் சுந்திரமான சிந்திக்கும் ஆற்றலை இல்லாமற் செய்து சமூகத்தில் 'பிராமணர்' என்ற ஒரு உயர்வர்க்கத்தை உருவாக்கி பின் ஏனைய மக்களை தாழ்ந்த சாதிகளாக ஆக்கி சமூக உள்முரண்பாட்டை உருவாக்கிவிட்டது இந்த ஆரியம். தமிழரிடையே திருக்குறளுக்கு உரைசெய்தவர்களுள் பரிமேலழகரின் உரையே ஏற்றுக்கொள்ளப் பட்டது. அவர் ஒரு பிராமணப் பெரியார் என்பதனால் திருக்குறள் தரும் பொருளில் பிராமணிய செல்வாக்கு அதிகரித்துவிட்டது. ஆனால் அதனை நாம் ஒரு முகாமைத்துவ நூலாக திருவள்ளுவரின் பின்னணியையும் சேர்த்து நோக்குங்கால் திருக்குறளின் பொருள் மாறுபடவாய்ப்புண்டு. ஏனெனில் திருவள்ளுவர் ஒரு சமயப் பெரியார் அல்லர்; அவர் ஒரு அரசின் பிரதம அமைச்சராகவும் புலனாய்வுப் பரிவின் ஆலோசகராகவும் விளங்கியவர் என்பது ஆராய்ச்சியாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

எனும் 55வது குறளுக்கு உரைசெய்த பரிமேலழகர் பொருள்கூறுகையில் "தெய்வத்தை தொழுவதை விடவும் தனது கணவனையே தெய்வமாக நினைத்து அவன் பாதங்களைப் பணிந்து தொழுது எழுபவளான ஒரு பெண் 'பெய்'யெனக் கேட்கும்போது மழை பெய்யும்" என்கிறார். இது பெண்ணின் கற்பு வலிமையை பறைசாற்றுவதாக கூறுகிறார். அன்றும்சரி இன்றைய நாளிலும்சரி இத்தகைய ஒருபெண் மழையைப் பெய்யக் கோரி அது பெய்யாவிட்டால் அவள் கற்புடைய பெண்ணல்லவென்று அர்த்தமா? திருவள்ளுவர் நுண்மதி மிக்க அறிஞர் என்பதால் அவர் பரிமேலழகரின் கருத்தைக் கூறியிருக்க வாய்ப்பில்லை. திருவள்ளுவர் பெண்ணடிமை வாதத்தை வலியுறுத்தியிருக்க வாய்ப்பில்லை என்பது பிற குறள்களிலிருந்து தெளிவு. வானிலைத் தொழிற்பாடு ஒன்றுடன் பெண்ணின் குல ஒழுக்கத்தை முடிச்சுப் போட்டது பரிமேலழகரின் பொருத்தமற்ற செயல்.

**தெய்வம் என்ற கற்பனை உருவத்தை வழிபடுவதை விடவும் 'கணவன்-மனைவி' என்ற குடும்பக் கட்டுக்கோப்பை வலுப்படுத்தி கணவனின் ஆக்கபூர்வ செயல்களுக்கு வலுச்சேர்க்கும் மனைவியானவள்**

மழையைவேண்டி உழவர் ஏங்கிநிற்கும்போது திடீரென வந்து பொழிகின்ற நன்மழையைப் போன்று சொல்லால் அளவிடமுடியாத பெரும் மதிப்புக்குரியவள் என்பதே இக்குறளின் உண்மையான பொருளாக இருக்கவேண்டும். இவ்வகையில் திருக்குறள் ஒவ்வொன்றினதும் சரியான கருத்தை மதச்சார்பின்றி நாம் எடுத்துநோக்கினால் அது இன்றைய எமது சமூகத்துக்கு பெரிதும் பயன்படும்.

தமிழரின் அபிவிருத்திக்கும் தனிமனித உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கும் பெரும் தடையாக அமைவது காலத்துக்கேற்ற விரைவான மாற்றத்தையும் நேர்முக மனப்பாங்கையும் சமூகத்தில் வளர்க்கும் போக்கை எமது படைப்பிலக்கியங்கள் போதுமான அளவு உள்வாங்கிக் கொள்ளாமையாகும். அதனோடு சாதிய சிந்தனையும் பெண்ணடிமைவாதமும் சேரும்போது எமது வளர்ச்சி மேலும் கேள்விக் குறியாகிறது. பெண்களை சரிநிகராக மதிக்கத் தவறும் ஒரு சமூகம் அபிவிருத்தி அடைய இயலாது. அவ்வகையில் திருவள்ளுவர் உற்பத்தித் திறன்மேம்பாடு தொடர்பில் என்னகூறுகின்றாரென வாசகர்களுக்கு மேலோட்டமாக எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1945ல் ஜப்பான்மீது போடப்பட்ட அமெரிக்க அணுக்குண்டுகளினால் உண்டான பேரழிவிலி ருந்து ஜப்பானை மீட்டு துரிதமாக அபிவிருத்தியடையச் செய்த 'கைஸென்' வழிமுறையானது 5செயற்படி முறைகளைக் கொண்டது. இதனால் அது '5S' என சுருக்கமாக அழைக்கப்படுகிறது. '5S' இன்று உலகெங்கிலும் பிரபலமடைந்துள்ள ஒரு அணுகுமுறையாகும். இலங்கை அரசு ஜப்பானிய அரசின் நிதியுதவியுடனும் பயிற்சிகளுடனும் நமது நாட்டில் '5S' உபாயங்களை கடைப்பிடிக்க நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. பல அரச திணைக்களங்களும் நிறுவனங்களும் வெற்றிகரமாக இதனைச் செயற்படுத்தி சர்வதேச அளவிலான உற்பத்தித் திறன்விருதுகளையும் பெற்றுள்ளன. கொழும்பு காஸல் வீதி வைத்தியசாலை மற்றும் அம்பாறை பொதுவைத்தியசாலை ஆகியன அவற்றுள் முக்கியமானவை.

5 ஜப்பானியச் சொற்களான செய்றி, செய்ட்டோன், செய்சோ, செய்கெட்சு, சிற்சுகே ஆகியவற்றை ஆங்கில எழுத்துக்களால் எழுதும்போது' ஒவ்வொரு சொல்லினதும் முதலாவதெழுத்தாக வருகின்ற 'S'களை குறிப்பதே '5S' ஆகும்.

Seiri - தேவையில்லாதவற்றை அகற்றுங்கள்
Seiton - தேவையானவற்றை தரம்பிரியுங்கள்

Seiso - பொருத்தமாக ஒழுங்குபடுத்துங்கள்
Seiketzu - தொடர்ந்து தூய்மை பேணுங்கள்
Sitsuke - இச்செயற்பாட்டை ஒரு ஒழுக்கமாக கடைப்பிடியுங்கள்

என்பதே '5S' கூறும் அறிவுரையாகும். இதன் அமுலாக்கம் பற்றிய உத்திகளை மிகவும் தெளிவாக நாம் பல்வேறு கட்டுரைகளிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். அவை சுவாரசியமானவை; நம் அனைவராலும் பின்பற்றத் தக்கவை; ஆனால் அர்ப்பணிப்பு (Commitment) அவசியம்.

வினைத்திறன்(efficiency), விளைதிறன் (effectiveness), தொழிற் பிரிப்பு (Job division), உற்பத்தித்திறன் (productivity) ஆகியவை பற்றி திருக்குறளின் தெரிந்துசெயல்வகை, தெரிந்து வினையாடல், ஒற்றாடல், அமைச்சு முதலிய அதிகாரங்கள் பேசுகின்றன. அதற்கு உதாரணமாக பின்வரும் சில குறட்பாக்களை எடுத்துக் காட்டலாம்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. (385)

பிரித்தலும் பேணிக்கொளலும் பிரிந்தாப்
பொருத்தலும் வல்லது அமைச்சு. (633)

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாய்ச்
சொல்லலும் வல்லது அமைச்சு. (634)

வகுத்தான் வகுத்தவகை அல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. (377)

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்று மில். (462)

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று. (515)

ஒரு வீடும்சரி அலுவலகமும்சரி உரியவாறு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும். மனிதர்கள், கருவிகள், மற்றும் பல பொருட்கள், சாதனங்கள் நிறைந்த இடமாக நமது அலுவலகமும் வீடும் காணப்படுகின்றன. எமது வினைத் திறனைப்

பாதிக்கும் காரணிகளில் மிகமுக்கியமானது ஒழுங்குபடுத்தப்படாத வேலைத் தலமும் முறையற்ற திட்டமிடலுமாகும். ஆதலால் உரியவற்றை உரியவாறு வகுத்து தொகுத்து ஒருங்கிணைத்து நிருவகிக்க வேண்டும். இல்லாவிட்டால் நேரவிரயமும் பணவிரயமும் ஏற்படும் அதேவேளை உற்பத்தி குறையும். முறைப்படி ஒழுங்குபடுத்தப்படாத ஒரு இடத்தில் கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த செல்வமும் சொத்துக்களும் இருந்தாலும் நன்மைகள் விளையமாட்டாது. இந்த உண்மையை உணர்ந்து பணியாற்ற முடியாத ஒருவனை நாம் 'சிறந்த முகாமையாளன்' என்று பாராட்டுவதில்லை என்கிறார் திருவள்ளுவர்.

'அலுவலகம்' என்பது பல மனிதர்களைக் கொண்டு கட்டப்பட்ட ஒரு கோபுரமாகும். இங்கே பல்வேறு சிந்தனை யோட்டமுள்ள பல தரப்பட்ட அரசியல் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்ற மனிதர்கள் இருப்பார்கள். ஆகவே அவர்களிடையே முரண்பாடுகள் எழுவது சகஜம். இத்தகைய சூழலில் சிறந்த 'முரண்பாட்டு முகாமைத்துவம்' அவசியம். பிரிந்து நிற்பவர்களையும் அபிவிருத்திக்காக ஒன்றுபடுத்தி எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறது திருக்குறள்.

அவ்வப்போது தேவையற்றவற்றை அகற்றி, தேவையானவற்றை அவை தேவைப்படும் ஒழுங்கில் முன்னுரிமைப்படுத்தி அடுக்கி, எப்போதும் தூய்மைபேணி, பணிபுரியும் அனைவரையும் நிறுவன வெற்றியின்பால் ஒழுகச்செய்வது நம் எல்லோருக்கும் அவசியமானது. இதனை கி.மு.31 காலப்பகுதியில் திருவள்ளுவர் வலியுறுத்தியிருக்கிறார். அதனை 5S 1945ல் மேலும் வலியுறுத்தியது.

எனவே, நாம் வாழ நாடுவாழ வேண்டும். நாட்டுநலன் கருதி ஒவ்வொருவரும் திருக்குறளைக் கற்று பயனடைவோமாக!. அலுவலக உற்பத்தித் திறனை அதிகரிப்போமாக!!.

*தி.ரவி*
*பிரதி கல்விப் பணிப்பாளர்*
*(திட்டமிடல்)*
*கல்குடா கல்வி வலயம்.*
*வாழைச்சேனை*



# கோறளைப்பற்றுப்பிரதேசமும் சீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றமும் சுருக்கமான ஒரு கண்ணோட்டம்

சீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் (ஒன்றிணைக்கபட்டது) என்ற பெயரைக் கொண்ட அரச சார்பற்ற நிறுவனமானது கோறளைப்பற்று பிரதேசத்தின் பல செயலகப் பிரதேசங்களிலும் பல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மிகுதியும் ஊக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றி வந்த வரலாற்றையும் இப்பொழுது மீள் பணியாற்றி வரும் அனுபவத்தினையும் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சீரம் நிறுவனம் பொதுவாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஆற்றிவரும் பணிகள் பற்றிய சுருக்க குறிப்புகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனம் 1993ம் வருடம் தொடக்கம் 1997 ம் வருடம் வரையான ஐந்து வருட காலப்பகுதியில் அடிப்படை போசாக்குத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதை குறிப்பிடலாம். சனசக்தி நம்பிக்கை நிதியம் என்ற அமைப்பின் பங்காளி நிறுவனமாக பணியாற்றும் தகைமை எமது நிறுவனத்திற்கு கிடைத்தது. உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்பட்ட இந்த அமைப்பு பன்முக மக்கள் அபிவிருத்திப்பணிகளை திட்டமிட்டு செயற்படுத்தியது. அத்தகைய திட்டங்களில் ஒன்றுதான் அடிப்படைப் போசாக்குத் திட்டம் (In-Depth Nutrition Programme) எனப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பல நிகழ்ச்சித்திட்டங்கள் உள்வாங்கப் பட்டிருந்தன அவற்றில் சில பின்வருமாறு

1) தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு தொடர்பாகவும் அங்கு கூடி வாழும் குடும்பங்கள் தொடர்பாகவும் முக்கிய விபரங்களையும் புள்ளி விபரங்களையும் உரியவாறு ஆவணப்படுத்துதல்

2) கிராமத்தின் தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் மக்கள் பங்களிப்புடன் அட்டவணைப்படுத்துதல்.

3) வருமானம் குறைந்த குடும்பங்களை உரியவாறு ஆய்வு செய்து அட்டவணைப்படுத்தல்.

04)வயது குறைந்த குழந்தைகளை நிறையெடுத்து ஒவ்வொரு குழந்தைக்கும் தனியாக விபர அட்டவணை தயாரித்துப் பேணி வந்தமை போசாக்கு குறைந்த குழந்தைகளை அடையாளம் கண்டு அக்குழந்தைகளை ஏற்றவாறு பராமரிக்கத் தேவையான அறிவுரைகளை பயிற்சிகள் வாயிலாக தாய்மாருக்கு கற்பித்தமை.

05)இலகுவாகவும் மலிவாகவும் நிறை உணவு தயாரிக்கும் முறைகளை பயிற்சி மூலமாக தாய்மாருக்குப் போதித்தமை.

06)கர்ப்பம் தரித்த தாய்மாரும் பாலூட்டும் தாய்மாரும் தங்களை எவ்வாறு பேணி வர வேண்டும் என்பதை பயிற்சி மூலமாக போதித்தல்.

07)விவசாயம் பயிர்த்தோட்டம் மிருக வளர்ப்பு முதலான சுயதொழில் முயற்சிகள் தொடர்பான பயிற்சிகளை வழங்கியமை

08)சுற்றாடலை பேணுதல் சுத்தமான நீர் மலசலகூட பாவனை அடிப்படைச் சுகாதாரத்தை பேணுதல் முதலான விடயங்களில் பயிற்சிகளை நடாத்தியமை

பாலர் பாடசாலைகளை நிறுவியும் அவை ஒவ்வொன்றிற்கும் ரூபா 25,000 பெறுமதியான தளபாடம் உபகரணம், விளையாட்டுப் பொருட்கள் முதலானவற்றை வழங்கியமை. இப்பாடசாலைகளுக்கு தகைமைவாய்ந்த பெண் தொண்டர் ஆசிரியர்களை நியமித்து அச்சேவையை நடைமுறைப்படுத்தியமை

குறித்த அடிப்படை போசாக்குத் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை அந்தந்த பிரதேச செயலாளர்களை தேவைக் கேற்றவாறு தெரிவு செய்தனர்.

ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டன.

ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவிலும் ஓர் அலுவலகம் திறக்கப்பட்டு அங்கு அத்தியாவசியமான உத்தியோகத்தர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டனர். ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலிருந்தும் கல்வி அறிவுள்ள பெண்களான ஏழு தொண்டர்கள் மக்கள் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்டனர்.

கோறளைப்பற்று (வடக்கு) பிரதேச செயலகப்பிரிவில் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும், கோறளைப்பற்று (மேற்குப்) பிரதேச பிரிவில் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இப் போசாக்குத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

அவ்வாறே கோறளைப்பற்று (மத்தி) வாழைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவிலும் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் போசாக்குத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது போசாக்குத் திட்டம் செயற்படுத்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாவன வருமாறு.

கிரான் கிழக்கு - 203
கிரான் மேற்கு
நாசிவந்தீவு - 205C
தேவாபுரம்
பாலையடித் தோணா - 250B
சுங்காங்கேணி
கோரகல்லிமடு - 203C
மீராவோடை தமிழ்
கல்குடா - 204
கும்புறு மூலை 203B

இப்பிரிவுகளில் வாழ்ந்து வந்த வருமானம் குறைந்த மக்கள் மத்தியில் சேமிப்புக் பழக்கம் ஊக்குவிக்கப்பட்டு விருப்பமுடன் முன்வந்தவர்கள் சேமிப்புத் திட்டத்தில் இணைக்கப்பட்டனர். அவ்வாறு சேமிப்புத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டவர்களுக்கு அவர்களின் சுயதொழில் முயற்சிகளுக்கான இலகு முறையில் கடனும் வழங்கப்பட்டது.

கோறளைப்பற்று பிராந்தியத்தில் யுத்தம் காரணமாகக் குடிபெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்காக நிவாரண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க பல நூறு தற்காலிக குடிசைகளை அவ்வப்போது அமைத்துக் கொடுத்ததுடன் அத்தகைய குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தொகை வீட்டுப்பாவனைப் பொருட்களை வழங்கிய அனுபவமும் எமது நிறுவனத்திற்கு உண்டு.

பின்னர் ஏற்பட்ட பல்வேறு காரணங்களால் இப் பிராந்தியத்தில் எமது சேவை தற்காலிகமாகத் தேக்கநிலை கண்டது.

இருப்பினும் அண்மைக்காலமாக வாழைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவில் எமது நுண்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.எமது செயற்பாடுகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பை வழங்கிவரும் பிரதேச செயலாளரும் ஏனைய உத்தியோகத்தர்களான கிராம உத்தியோகத்தர்கள் நிவாரண சகோதரி முதலானோருக்கும் சம்மந்தப்பட்ட மாதர் சங்கங்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் எம்முடன் இணைந்து நுண்கடன் திட்டத்தைச் செயற்படுத்தி வரும் மகளிர் சங்கங்கள் பற்றிய விபரங்களும் இதுவரை வழங்கப்பட்டு நடைமுறையிலுள்ள கடன்கள் பற்றிய விபரங்களும் வருமாறு.

| இல | மகளிர் சங்கங்கள் | கிராம சேவகர் பிரிவுகள் | கடன்பெற்றோர் தொகை |
|---|---|---|---|
| 01 | காயத்திரி மகளிர் சங்கம் | கறுவாக்கேணி-202A | 113 |
| 02 | சரஸ்வதி மகளிர் சங்கம் | கல்மடு - 204 | 188 |
| 03 | கலைவாணி மகளிர் சங்கம் | கண்ணகிபுரம் - 205D | 105 |
| 04 | இந்திரா மகளிர் சங்கம் | கும்புறுமூலை - 203B | 63 |
| 05 | சக்தி மகளிர் சங்கம் | வாழைச்சேனை தமிழ் - 205A | 79 |
| 06 | காந்தி மகளிர் சங்கம் | புதுக்குடியிருப்பு - 205 A | 264 |
| 07 | கலைமகள் மகளிர் சங்கம் | கிண்ணையடி - 202 | 121 |
| 08 | சாரதா மகளிர் சங்கம் | பேத்தாழை - 205B | 171 |
| 09 | வான்மதி மகளிர் சங்கம் | சுங்காங்கேணி - 202C | 28 |
| 10. | பூமகள் மகளிர் சங்கம் | கல்குடா - 204 | 47 |
| 11 | துவாரகா மகளிர் சங்கம் | மீராவோடை தமிழ் - 202 | 49 |
| 12. | மதுரா மகளிர் சங்கம் | நாசிவந்தீவு | 34 |

இது தவிர கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கங்கள் தமது சங்கம் மூலமாக உறுப்பினர்களுக்கான கடனொன்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளது. இவ்விடயம் தற்சமயம் பரிசீலனையில் உள்ளது. இரண்டு தரப்பாரும் பொதுவான இணக்கப்பாட்டிற்கு வந்தால் அச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கும் கடன் வழங்க வாய்ப்பு ஏற்படும்.

இனி சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் பற்றிய சுருக்கமான விபரக் கூற்றினையும் இங்கே தர விரும்புகின்றோம். அவையாவன.

1. பெயர் சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம்

2. விலாசம் தாழங்குடா ஆரையம்பதி மட்டக்களப்பு

3. தொலைபேசி 065-22246677

4. தொலை நகல 065-2246095

5. **பிரதம நிறைவேற்றுனா** திரு. ஆறுமுகம் லோகேஸ்பரன் - ச. நீ தலைவரும் நிறைவேற்றுப் பணிப்பாளரும்

6. **பதிவு** இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டவாக்கத்தின் பிரகாரம் ஒன்றிணைக்கப்பட்டது.

7. **செயற்பாட்டுப்பிரதேசம்** மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள்

# இலக்குகள்

தேசிய இனங்களுக்கிடையேயும் மக்களுக்கிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்துவதன் மூலம் நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்துதல்

அடையாளம் காணப்படும் பல தேவைகளையுடைய குடும்பங்களை அணிதிரட்டி ஒன்றுபடுத்தி பொருத்தமான வாழ்வாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அவர்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியைத் திட்டமிட்டவாறு முன்னேற்றுதல்

குறித்த பொருளாதார அபிவிருத்திக் கேதுவான அடையாளம் காணப்பட்ட பயனாளிகளுக்குத் தொழிநுட்பப்பயிற்சிகளையும் கடன் வசதியையும் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவர்களை ஏற்றவாறு கண்காணித்து அவர்கள் குறித்த இலக்கை அடையவும் எதிர்பார்த்த வருமானத்தைப் பெறவும் வழிவகுத்தல்.

# தூர நோக்கு

பல்வேறு அனர்த்தங்கள் காரணமாகவும் இயற்கையிலேயே வறுமைக்குள்ளாகியும் துன்ப துயரங்களை அனுபவிக்கும் குடும்பங்களை முழு இலங்கை ரீதியாகவும் கண்டறிந்து அவர்களின் துயர் நீக்கி பொருத்தமான செயற்றிட்டங்களின் மூலமாக அவர்கள் ஒவ்வொருவரும்

மனிதவாழ்வுக்கு தேவையான எல்லா உரிமைகளையும் வசதிகளையும் நன்மைகளையும் பெற்று மகிழ்சிகரமான வாழ்வு வாழ்வதற்கு வழிசமைத்தல்

# தற்போதைய செயற்பாடுகள்

வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) கீழ் அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்பட்ட 02 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் (NECCDEP) கீழ் அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்பட்ட 17 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் வழங்கப்பட்ட 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் செயற்படுத்தப்பட வேண்டிய எல்லா விதமான அபிவிருத்திப்பணிகளையும் திருப்திகரமாக நிறைவேற்றி அவற்றை அந்தந்த கிராம மக்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

நுண்கடன் திட்டத்தின் கீழ் உள்ள தற்போதைய நிலை பின்வருமாறு

***செயற்பாட்டுப் பிரதேசம் - மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம்.***

| | |
|---|---|
| பிரதேச செயலகப்பிரிவுகள் | 14 |
| மொத்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் | 128 |
| மொத்த உறுப்பினர்கள் | 29,781 |
| மொத்த தொழில் சார் குழுக்கள் | 1,985 |
| மொத்த கிராம மட்டச் சங்கங்கள் | 139 |
| கொடுத்த மொத்தக்கடன்கள் | 13,205 |

# நிதிவளம்

சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றமானது மத்திய அரசாங்கத்தின் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் உறுப்புரிமை பெற்ற சிரேஸ்ட நிறுவனங்களுள் ஒன்றாகும். அதனால் பொருத்தமான உத்தரவாதத்தின் கீழ் சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றம் தனக்குத் தேவையான நிதியை அந்த நிதியத்திலிருந்தே வட்டியுடன் கூடிய திருப்பிச் செலுத்தும் முறையிலான கடனாகப் பெற்றுக் கொள்கின்றது.

## கடந்தகால அனுபவம்

சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றமானது 1990 ஆம் ஆண்டு தொடக்கம் அதன் சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளைத் திட்டமிட்டவாறு செயல்படுத்தி

வருகின்றது. இதன் பிரகாரம் பல் தேசிய இலங்கை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கடந்த 19 ஆண்டுகளாகப் பன்முக சமூக மேம்பாட்டு திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது.

இச் செயற்பாடுகளுள் சமூக வலுவூட்டல் விழிப்புணர்வூட்டல் மனிதவள அபிவிருத்திப் பயிற்சிகள்தொழில்சார் அபிவிருத்திப்பயிற்சிகள் முதலான பல்வேறு பயிற்சிகளும் அவ்வப்போது குறித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் தற்காலிக வீடுகளை அமைத்தல் குடிநீர் கிணறுகளை அமைத்தல் மலசல கூடங்களை அமைத்தல். அடிப்படைச் சுகாதாரம் சம்மந்தமான கருமங்களை முன்னுரிமைப்படுத்தல். பயன்தரு மரக்கன்றுகளை இலவசமாக வழங்குவதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு நிலைமைகளைச் சீராக்குதல், முதலான பல்வேறு கருமங்களிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டது.

யுத்தம் காரணமாகவும், சுனாமி முதலான இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் காலத்திற்குக் காலம் அநாதரவாக வந்த மக்களை உடனுக்குடன் ஆதரித்து அவர்களுக்கான நிவாரணப்பணிகளையும் அதனைத் தொடர்ந்து புனர்வாழ்வுப் பணிகள் புனர் நிர்மாணப்பணிகள் முதலானவற்றையும் மிகுந்த அர்ப்பணிப்புடன் அரசாங்க அதிகாரிகளினதும் சமூகப் பிரமுகர்களினதும் பாராட்டுக்களைப் பெறும் வகையில் நிறைவேற்றி வந்திருக்கிறது.

சரீரம் ஸ்ரீ லங்கா தேசிய மன்றமானது கிழக்குப்பிராந்தியத்தில் முதன்மைத்தன்மை வாய்ந்த நுண்கடன் செயற்பாட்டில் நிறுவனமாகவும் இலங்கையிலுள்ள சிறந்த நிறுவனங்களுள் ஒன்றாகவும் கணிக்கப்பட்டு வருவதால் இந் நிறுவனத்தினர் இலங்கையிலும் பல வெளிநாடுகளிலும் காலத்திற்குக் காலம் நடைபெறும் செயல் அமர்வுகளிலும் சிறப்பு மகாநாடுகளிலும் பங்கு பற்றும் வாய்ப்பைப் பெற்று வருகின்றனர். இந்த வாய்ப்பின் மூலமாக நிறுவனத்தின் நிருவாகச் செயற்திறன் வலுப்படுத்த முடிவதுடன், சமூகத்தின் முன்னேற்றத்தையும் முன்னெடுத்துச் செல்ல முடிகிறது.

## அன்பளிப்புகள்

சரீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றம் கல்வி, கலாசாரம், போசாக்கு, சுற்றாடல் விளையாட்டுத் துறை, ஆன்மீகத் துறை முதலான பல்வேறு சமூக

அபிவிருத்திப் பணிகளை மேற் கொள்ளும் உண்மையான நிறுவனங்களுக்கு அவ்வப்பொழுது அன்பளிப்புகளை வழங்கி வருகிறது. நிறுவனத்தின் வருடாந்த வருமானத்தின் 20 வீதத்திற்கு மேற்படாத ஒரு தொகையினை அச் செயற்பாட்டிற்காக வழங்குவதை அதன் பொதுக் கொள்கையாக கொண்டுள்ளது.

# ஆன்மீக சேவை

மனித வளங்களை நல்ல வழிகளில் மாற்றுவதற்கு சமூக வலுவூட்டல் விழிப்புணர்வூட்டல் கல்வி சார் பயிற்சிகளை வழங்குதல் முதலானவற்றினால் மாத்திரம் இயலாது என்பதை அனுபவ ரீதியாக கண்டறிந்த சர்வோதய ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தினர் அவ்வாறான மாற்றத்திற்கு ஆன்மீக செயற்பாடுகள் ஆணிவேராகும் எனக் கண்டறிந்தனர். அதன் காரணமாகத் தனது தலைமை அலுவலக காணியில் நிசப்தம் ஸ்ரீ மஹா விஷ்ணு தேவஸ்தானம் என்ற பெயரில் ஆலயம் ஒன்றை 1997 ம் ஆண்டு அமைத்து அதன் வாயிலாக சிறப்பான சமயப்பணிகளை ஆற்றிவருகிறார்கள். சர்வோதய நிறுவனத்தின் அனுசரனையுடன் ஆலய நிருவாகத்தை சுதந்திரமானதொரு அறக்கட்டளை நிருவகித்து வருகிறது. சர்வோதய ஸ்ரீ லங்கா தேசிய மன்றத்தின் கொள்கை எல்லா இனங்களையும் எல்லா மதங்களையும் எல்லா மக்களையும் ஒன்றாக காண்பதாகும் இப்புனித கைங்கரியம் இந்த ஆலயத்தின் செயற்பாடுகள் மூலமாக உறுதிப்படுத்தப்படுகின்றது. இம்மன்றத்தின் எண்ணக்கருக்கள் அதன் கீதத்தில் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது ஆதலால் அச் சர்வோதய கீதத்தை இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்..

*சர்வோதயமே எங்கள் சர்வோதயமே*
*சமத்துவம் பேணும் சர்வோதயமே*
*(சர்வோதயமே)*

*சாகர நடுவில் வலம்புரிச் சங்கதன்*
*சப்திக்கும் ஒலிச் சின்னமதாய்*
*ஏக நாட்டில் ஒளி வீசும்*
*எங்கள் புனித சர்வோதயமே*
*(சர்வோதயமே)*

*வங்கக் கடல் சூழ் இலங்கையிலே*
*வளரும் துன்பம் களைந்திடவே*

எங்கும் நிறைந்து துணைபுரிந்து
ஏழ்மை நீக்கும் சரீரமே

(சரீரமே)

நல்வாழ்விற்கு நல்வழி செய்து
நாட்டினில் நற்பணி புரிதலினால்
எல்லா இனமும் இனிதே வாழ
என்றும் துணைசெய் சரீரமே

(சரீரமே)

தேசிய ஒற்றுமை நிலை பெற்றே நாம்
தேசம் எங்கணும் ஒற்றுமையாய்
மாசில்லாக் கலை, பொருள், ஆன்மீகம்
மகிழ்வாய் ஊட்டும் சரீரமே

(சரீரமே)

இலங்கையில் வாழும் அனைவரிலும்
இனமத பேதம் தாம் களைந்து
நலமாய் வாழ வகை செய்யும்
நல்ல சரீரம் வாழ்கவே! வாழ்கவே! வாழ்கவே!
மலர்வுடன் சரீரம் வாழ்கவே!............
சரீரமே எங்கள் சரீரமே

(சரீரமே)

**திரு.சி.க. பொன்னம்பலம்**
**சரீர நிலைய தலைமைப்பணிப்பாளர்**
**சரீரம்**
**தாழங்குடா,**
**மட்டக்களப்பு.**



# நொறுங்குண்ட இதயம்

''கஸ்தூரி ... நில்லு கஸ்தூரி நான் சொல்லுறத ஒரு நிமிடம் கேளு.......!''

''என்ன...! ஏன் கேட்கனும், நீங்க எத்தனை தடைவ சொன்னாலும் என்ட முடிவை மாத்த ஏலாது.''

''ஏன்...? என்ன காரணம் என்னைய கல்யாணம், செய்து கொள்ள உனக்கு விரும்பம் இல்லையா? .......... எனக்கு என்ன குறை இருக்கு? சொல்லு.''

''உங்களில் எந்த குறையுமே இல்ல வாசு! என்னையிலதான்... நான், நான் தான் அதிஸ்டம் இல்லாதவள்'' என்று கூறி முடிக்கும்போது கஸ்தூரியின் கண்கள் குளமாகின. ''வாசு நீங்க ரொம்ப நல்லவரு. நீங்க என்னைய கல்யாணம் பண்ணிக்கிட்டு உங்கட வாழ்க்கைகயை வீணாக்க வேணாம்.''

''கஸ்தூரி! என்னவாக இருந்தாலும் வெளிப்படையாகச் சொல்லு இப்படி புதிர் போட்டா, என்னால கண்டுபிடிக்க ஏலாது; என்ன பிரச்சினை? எதுவாக இருந்தாலும் என்னட்ட சொல்லு.''

''ம்ம்... சொல்றன். ஆனா இப்ப என்னைய நேசிக்கிற நீங்க என்ட கதையை கேட்டபின் என்னைய வெறுப்பீங்க..............''

(சில வருடங்களுக்கு முன்)
''அம்மா... அம்மா.''
''ஏன்னடி. ஏன் இப்படி கத்துறா?''

''அம்மா நேரமாகுது வேலைக்கு போகணும் சீக்கிரம் வா.'' ''ஆ... கஸ்தூரி இன்டைக்கு கொஞ்ச நேரத்தோட வீட்டுக்கு வா, இண்டைக்கு உன்னைய பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டில் இருந்து வாறாங்க.''

''சரியம்மா........'' என்று வெட்கத்துடன் சொல்லிவிட்டு வேலைக்கு சென்றுவிட்டாள் கஸ்தூரி

மாலை 4.00 மணியாகிவிட்டது. மாப்பிள்ளை வீட்டார் வந்துவிட்டனர், கஸ்தூரியை பார்ப்பதற்காக காத்திருந்தனர். நேரம் 4.30, 5.00 என்று தாண்டிக் கொண்டே சென்றது. மாப்பிள்ளை வீட்டாரிடையே சிறு சலசலப்பு.

''இன்றைக்கு மட்டும்தான் இப்பிடி லேட்டா வாறவளோ. இல்லாட்டி ஒவ்வொரு நாளும் இப்படித்தானோ......''

''இந்தப் பொண்ணு நம்மட பையனுக்கு சரியில்ல. வாங்க எல்லோரும் போவம்'' என்று கூறிவிட்டு அனைவரும் சென்றுவிட்டனர்.

கஸ்தூரி வீட்டிற்கு வந்து பார்க்கிறாள். புயலடித்து ஓய்ந்ததைப்போன்ற நிசப்தம். அம்மா ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தாள். அம்மா எதுவும் சொல்லாமலே கஸ்தூரிக்கு எல்லாம் புரிந்துவிட்டது.

''அம்மா... அவங்க போனா போகட்டும்; இவங்கள விட்டா வேற மாப்பிள்ளையே இல்லையா?'' என்று தாய்க்கு ஆறுதல் கூறுகிறாள். பின் அறையை சாத்திவிட்டு உள்ளே குமுறுகிறாள். இத்துடன் இரண்டாவது தடவையாகவும் கஸ்தூரியின் திருமணம் தடைப்பட்டது. கஸ்தூரி போதியளவு அழகானவள், படித்தவள், பண்புள்ளவள் வைத்தியசாலையிலே தாதியாகப் பணிபுரிபவள், சில வேளைகளில் வேலைப்பளு அதிகமாக இருப்பதால் வீட்டிற்கு வருவதற்கு இராப்பொழுது ஆகிவிடும். இதனால் அவளை பலரும் பலவாறு பேசுகிறார்கள்.

சில மாதங்கள் கடந்துவிட்ட நிலையில்............

''கஸ்தூரி இண்டைக்கு நீ வேலைக்கு போக வேணாம்.''

''ஏன்.?''

''இண்டைக்கு உன்னைய பெண் பார்க்க வாறாங்க.''

''அம்மா உனக்கு வேற வேலையே இல்லையா. ஏற்கனவே இரண்டு தரம் நான் அவமானப்பட்டது போதாதா? எனக்கு கல்யாணம் தேவல்ல. நான் இப்பிடியே உங்க கூடவே கடைசி வரைக்கும் இருக்கிறன்.''

''கஸ்தூரி..... உனக்கு ஒரு தாயிர கஸ்டம் புரியாது வயசுக்கு வந்த பிள்ளையை வீட்டில வச்சிருக்கிறது நெருப்பில நடக்கிறதுக்கு சமம் இந்த மாப்பிள்ளையிட்ட எல்லாத்தையுமே சொல்லியாச்சு அவருக்கு முழு சம்மதம் இப்ப அவரு உன்னைய பார்கணுமாம் இவ்வளவுதான்.''

''...ம். சரி உங்களுக்காக இண்டைக்கு நிற்கிறன்."

மாப்பிள்ளை வீட்டார் வருகின்றனர். பெண் பார்க்கின்றனர் மாப்பிள்ளைக்கு பிடித்துவிட்டது.
'' சரி ............... பெண்ணை பிடிச்சிருக்கு இனி என்ன! மத்த மத்த விசயங்களைப் பேச வேண்டியதுதானே........"

''இஞ்சபாருங்கப்பா! எங்களுக்கு இருக்கிறது ஒரேயோரு பையன். அவனும் நல்ல அரசாங்க வேலை பார்க்கிறான் எங்களுக்கு ஒரு ஐம்பது பவுண் நகை போடினும். மற்றது ஐம்பது லட்சம் ரூபா கல்யாண செலவையும் நீங்களே ஏத்துக்கணும். என்னம்மா சரிதானே! ஏற்கனவே இரண்டு தரம் கல்யாணம் தடைப்பட்டு இருக்கு இதுக்கு சரி என்டா எங்களுக்கு சம்மதம்..."

இதையெல்லாம் கேட்டவுடன் கஸ்தூரிக்கு கோபம் வந்துவிட்டது. கண்ணகி வேடம் பூண்டவளாக;

எல்லாரும் எழுந்துபோங்க.... எழும்புங்க. என்னையா? நீ கல்யாணம் பேசவந்தாயா! இல்லாட்டி உங்கட மகன விற்க வந்தாயா...?

'' எல்லாரும் எழும்பித்து வாங்கையா. இது பெண்ணா...! இப்பிடி பேசுறா! கஸ்தூரி மனமுடைந்து அழுகிறாள். அவள் இனிமேல் கல்யாணமே பண்ணுவதே இல்ல என்ற உறுதியை மனதுக்குள் எடுத்துக் கொண்டாள்.

(மீண்டும். நிகழ்காலம்)
கண்களை துடைத்தவளாக, ''இப்ப சொல்லுங்க வாசு இதுக்குப்பிறகு நீங்க என்னைய கல்யாணம் பண்ணிக் கொள்ள சம்மதிக்கிறீங்களா?"

''ம். இவ்வளவுதானா நான் என்னமோ ஏதோ எண்டு பயந்து போய்த்தன். என்னைப் பொறுத்தவரைக்கும் இது பிரச்சினையே இல்லை இப்பவும் சொல்லுறன் நீங்கதான் எனக்கு மனைவி"

இதையெல்லாம் கேட்டதும்கஸ்தூரிக்கு வியப்பாக இருந்தது. இந்த காலத்திலே இப்பிடி ஒரு மனிதனா? என்று நினைத்துக் கொண்டு மனதின் உள்ளே வாசுவிற்கு நன்றி தெரிவித்தாள்.

வாசுவின் வீட்டாருக்கும் கஸ்தூரியைப் பிடித்துவிட்டது இரண்டு வீட்டாரும் ஒன்றா சேர்ந்து கல்யாணத்திற்கு நாளையும் குறித்து விட்டனர். இன்னும் இரண்டு வாரத்தில் கல்யாண ஏற்பாடுகள் மும்முரமாக நடக்கின்றது. நாள் நெருங்கி விட்டது. கஸ்தூரி பழைய விடயங்களை மறந்து ரொம்பவும் மகிழ்வாக இருக்கிறாள். கல்யாண நாள் இன்றுதான். கல்யாண மண்டபத்தில் கஸ்தூரி ஐயர் மந்திரங்களை உச்சரித்துக் கொண்டு. ''நேரமாகுது பெண்ணை அழைச்சிட்டு வாங்க.'' என்று ஐயர் கூறுகின்றார்.

கஸ்தூரியும் பல கனவுகளோடு மணமேடையில் வந்து அமருகிறாள் ''சரி தாலியை எடுத்து கட்டுங்கோ.''

'' இல்லை நிறுத்துங்க................ ''

அனைவரும் திரும்பி பார்க்கின்றனர். பொலிசார் வந்து கல்யாணத்தை நிறுத்துகின்றனர். வாசுவை கைதுசெய்து அழைத்துச் செல்கின்றனர். ''இவன் ஏற்கனவே நிறையப்பேரை கல்யாணம் பண்ணி ஏமாத்தியிருக்கான் நல்லவேளை இன்னும் தாலி கட்டல..... ''

கஸ்தூரி மணக்கோலத்தில் கண்ட கனவுகள் சுக்குநூறாக உடைகின்றன. கண்கள் தன்னையறியாமல் நீரை இறைக்கின்றன. தனி மரமாக மேடையிலே மணக்கோலத்தில் நிற்கிறாள்..?

**ரா.லோஜித்**
தரம் - 12
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

*(பிரதேசஇலக்கிய விழா 2010 போட்டியில் பாடசாலை மட்டத்தில் 1ம் இடம் பெற்ற சிறுகதை)*



# மல்லிகை மொட்டு மாலை

தன் கணவன் இப்படிப்பட்டவரா?

கபிலாவுக்கு அதை நினைக்கவே சகிக்க முடியவில்லை. தன் கணவரைப்பற்றி வந்த தொலைபேசி அழைப்புதான் அவளுக்கு மீண்டும் மீண்டும் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது. அலுவலகத்தில் இருந்து கடமை முடிந்து நேரத்திற்கு வீட்டிற்கு வருபவர், கடந்த சில மாதங்களாக நேரம் கழித்து வீட்டிற்கு வருவதும், உடம்பு ஒரே சோர்வாக இருக்கு என்று அடிக்கடி கூறுவதும். இதன் காரணமாக இருக்குமோ? இருக்காது. அவளுக்கு தொலைபேசியில் வந்த தகவலை நம்புவதா? அல்லது யாரோ வேணும் என்று சொன்ன தகவல் என்று விட்டுவிடுவதா என்று புரியவில்லை.

அன்று புதன்கிழமை, கபிலா தன் இரு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு, கணவரும் அலுவலகத்திற்குச் சென்றதும், வீட்டு வேலைகளில் மூழ்கியிருந்தாள்.

அப்போதுதான் வீட்டுத்தொலைபேசி அலறியது. அதை எடுத்து "ஹலோ" என்றதும் எதிர்முனையிலிருந்து "உங்க குடும்பம் நல்லா இருக்கணும். என்ற நோக்கத்தில கதைக்கன். தயவுசெய்து போனை வைத்துவிடாமல் நான் சொல்வதை கொஞ்சம் கேளுங்கள்" என்றது, அந்த முனைக்குரல். உங்கள் கணவர் அஸீஸ் எங்கட பக்கத்து வீட்டுக்கு டெயிலி வந்து போராரு. அங்க அண்பிளைகளும் இல்ல. அந்த வீட்டுக்காராக்கள் அவ்வளவு நல்லமில்ல ஏதோ நான் சொல்வத சொல்லிட்டன் உங்கட வாழ்கைய நீங்க காப்பாத்திக்க பாருங்க" என்றது அந்த அனாமதேய குரல் - திடீரென கவ்விய பதட்டத்துடன் "நீங்க யாரு கதைக்கீங்க" என்று கேட்டதும். "உங்கள் சகோதரன்" என்றதும் தொலைபேசி துண்டிக்கப்பட்டது.

"இவர் இப்படி துரோகம் செய்பவரா? இதப்பற்றி யாருக்கிட்ட கேட்கலாம்." என்று யோசிக்க அவளுக்கு தலை சுற்றியது.

அஸீசும் கபிலாவும் காதலித்து பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் திருமணப்பந்தத்தில் இணைந்தவர்கள். இரண்டு பெண் பிள்ளைகள் வேறு; குடும்ப வண்டி மிகவும் சந்தோசமாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது.



*பிரதேச செயலகம், வாழைச்சேனை*

ஒவ்வொரு வார இறுதியிலும் குடும்பத்துடன் எங்காவது வெளியில் சென்று சாப்பிட்டு, மகிழ்ச்சிகரமாக அன்றைய பொழுது முழுவதும் சந்தோசமாக கழியும்.

நானும் பிள்ளைகளும் ஆசைப்பட்டது எதைக்கேட்டாலும் வாங்கித்தருவார். ஏன் இவர் இப்படி மாறினார்? இவரு கொஞ்ச நாளா ஒரு இடத்தையும் கூட்டிப்போரயும் இல்ல. அவரிட முகத்தில ஒரு உற்சாகத்தையும் காணல. முகம் தொடர்ந்து வாடிய படியே இருக்காரு.

என்ன நீங்க இப்படி இருக்கீங்க என்று கேட்டா? ஒன்றுமில்ல நான் நல்லாத்தான். இருக்கன் என்று மளுப்புகின்ற பதில் வேறு,

இப்படிப்பட்ட ஒரு நல்லவரையும் தண்ட பக்கம் எடுக்கனும் என்று திரியிர சிரிக்கியளாலதான் பயம், முகம் தெரியாத யாரையோ மனசிக்குள் சபித்துக்கொண்டாள் கபிலா.

அவளுக்கு அன்றைய பகல் பொழுது எப்படிப் போனது என்றே தெரியவில்லை. ஒரே யோசினையாக இருந்தது. பகல் உணவு சாப்பிட அவளுக்கு மனமில்ல. முகத்தில எந்தவித உற்சாகத்தையும் காணல தன் ஜீவனை யாரோ பலவந்தமாக பறித்தெடுத்தது போன்ற வலி கபிலா வாட்டியது. அன்று வழமைக்கு மாறாக நேரத்தோட வீட்டுக்கு வந்த அஸீஸ் ''என்ன கபிலா ஒரு மாதிரியாய் இருக்கா'' என்றதும். ''ஒன்றுமில்லை'' என்று சற்று சினம் கலந்த பதில் கபிலாவிடம் இருந்து வந்தது. அஸீசுக்கு ஒரே யோசயையாக இருந்தது. ''இவளுக்கு என்ன நடந்தது? ஏன் ஒருநாளும் இல்லாமல் இப்படி நடக்கிறாள்? வீட்டுவேலைகள் அதிகமோ தெரியாது'' என்று தனக்கு தானே சமாதானப் படுத்திக்கொண்டான்.

''கபிலா கொஞ்சம் இங்க வாவன்'' என்று கூப்பிட்டான் அஸீஸ். ''என்ன! என்று அதே அதட்டலுடன் கபிலா அவன்முன் வந்துநின்றாள்.''

அவன் தன் கையில் இருந்த பாரிசலை கொடுத்து ''நீ ஆசையாக வாங்கிக் கேட்ட மல்லி மொட்டு தங்கமாலை இதில இருக்கு போடு பார்ப்பம்'' என்றான். இதை அவள் எதிர்பார்த்திருக்கவில்லை. ''உங்களுக்கு இப்ப இது வாங்க ஏது காசு'' நான் சில மாதமாக வீட்டுக்கு ''லேற்றாகி'' வந்தேனே ஏன் தெரியுமா? வேலை முடிந்து ஒப்பிசுக்கு பக்கத்தில 10

பிள்ளைகளுக்கு ''டியூசன்'' கொடுத்தன் அதில் கிடைத்த சம்பளத்திலதான் இதை வாங்கினேன். ''டியூசன்'' கொடுப்பதை உன்னிடம் சொல்லாமல் இருந்ததிற்கும் ஒரு காரணம் இருக்கு நீ ஆசையாய் கேட்ட தங்க மாலையை வாங்கிவந்து தரும் போது சொல்லலாம்தானே என்று இருந்திட்டன்.''

இவள் எதுவும் பேசாமல் அவனின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழத்தொடங்கினாள் அவன் எதுவும் புரியாமல் அவளை அரவணைத்து உச்சிமுகர்ந்தான்.

*(முற்றும்)*

*வாழைச்சேனை முர்ஷீத்*

*பிரதேச செயலகம்*
*வாழைச்சேனை*

# தாலிக்கொடி



ஊரில் ஒரே.. பதற்றமாக இருந்தது. எல்லோர் முகங்களிலும் இனம் புரியாத பயமும் கவலையும் சூழ்ந்து இருந்தன. பாடசாலைகள் நடைபெறவில்லை வசதியுள்ளவர்கள் தமது வாகனங்களில் தமது குடும்பம் தப்பித்தால் போதுமென்று ஊரைவிட்டு அடுத்தவீட்டுக்கும் தெரியாமல் ஓடிப்போனார்கள். பலர் தமது இருப்புக்களை மூட்டையாகக்கட்டித் தயாராக வைத்துக்கொண்டு வீதியில் நின்று வீர வசனங்களை ஊருக்கு உபதேசம் செய்தார்கள்.

அண்டிய கிராமங்களில் இரவு வேளைகளில் நடந்த அட்டுழியங்கள் இந்த ஊர் மக்களையும் கிலி கொள்ள வைத்திருந்தன..... யாருக்கு யார்? பாதுகாப்பு கொடுப்பது? யார் யாரை காப்பாற்றுவது? என்று தெரியாமல் மக்கள் தவித்தனர். வீடுகளில் அடுப்புக்கள எரியவில்லை. உணவுவகைகள் எதுவுமில்லை. குழந்தைகள் பசியால் துடித்தன... கடைகள் யாவும் பூட்டிக் கிடந்தன... விசப்புகையாக வதந்திகளும் பரவின... கிழக்கு மாகாணம் ஸ்தம்பித்துப் போனது. போக்குவரத்துகள் தடைப்பட்டு தொடர்புகள் அற்றுப்போனது. வன்செயல் வெடிக்கும் அபாயம் தோன்றியிருந்தது.

பொன்னம்பலம் இடிவிழுந்த நிலையில் துடித்துப்போனான். சாராவெளியில் மாட்டுப்பட்டி இருந்தது.. கடன்பட்டு சோதையன் கட்டில தனது பாரம்பரிய விவசாயப்பூமியில் வேளாண்மை செய்திருந்தான்.. எல்லாம்.. அழிந்து... போயிற்று.

“ஊராக்கள் எல்லாம் .. குடியெழும்பி போறாங்க நாம இந்த குமர்ப்பிள்ளையள வைச்சிட்டு இருக்கலாமா...? போனதெல்லாம் போகட்டும் யோசிச்சாப்புல வரயா.. போகுது..?” மனைவி பார்வதி மிக உருக்கமாகச் சொன்னாள். பயப் பிராந்தியுடன் பிள்ளைகள் மிரள மிரள விழித்தபடி நின்றிருந்தனர். பெருமுச்சோடு பொன்னம்பலம் வீட்டை நிமிர்ந்து பார்க்கின்றான் பொன்னம்பலம்... “பார்வதி... இந்த வீட்டக் கட்ட நாம எவ்வளவு கஸ்டப்பட்டோம். வேர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, இரவும் பகலுமா... இதைவிட்டுட்டு.. நாம பொறந்த மண்ணை மறந்திட்டு” விம்முகிறான், “ இப்ப

பிரதேச செயலகம், வாழைச்சேனை

நாம.. தூரயா போறம், அடுத்த ஊருக்குத்தானே. ஊருக்குள்ள தலைவர் பதவிக்கு ஆசைப்பட்டவன் எல்லாம் உயிர்தான பெரிதென்று ஓடிட்டான் . நீங்கமட்டும்... என்ன? செய்யப்போறிங்க.." என்று சொல்லவும்.

வீதியில் அழுதுபுலம்பியபடி.. சத்தமிட்டுக்கொண்டு சனமெல்லாம் முட்டிமோதி ஓடினார்கள் என்ன ஏது என்று தெரியவில்லை.

"அப்பா..." என்று பிள்ளைகள் ஒப்பாரி வைத்து பொன்னம்பலத்தை இழுத்ததனால் குழம்பிப்போன மன எரிச்சலோடு வெளியே வந்தான். "ஏன் ஓடுறிங்க...? என்ன நடந்தது...? "என்று சத்தமாக கேட்டான். ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது... சொல்லவும் நேரமில்லை. "டேய்.. பொன்னா... இனியும் நிற்கேலாது... புள்ள... எல்லோரும் ஓடிவாங்க..." தொண்டை கிழிய கத்தினான் கந்தசாமி.

"டேய் கந்தா.. வீணா சனங்களை குழப்பி வேடிக்கை காட்டாதிங்க இது வாழ்க்கைப் பிரச்சனை ஊரைவிட்டு ஓடிப்போய் என்ன? செய்யப்போறிங்க..." ஆக்கிரோஸமாக பொன்னம்பலம் கேட்டான்.

"புள்ள... அவனுக்கு பைத்தியம் ஊரோடினா ஒத்தோடத்தான் வேணும். வாங்க.." படபடப்புடன் கத்தினான் கந்தசாமி "அம்மா! அப்பா.., அண்ணா, எங்கே?" "தம்பி டேய்..! ஆளை ஆள் தேடிக்கதறும் அவலம் மூட்டைமுடிச்சுகளோடு வயதுபோனவர்களை தூக்கிக் கொண்டு ... எங்கே? போகிறோம். என் தெரியாமல், ஓட்டமும் நடையுமாய் தடுக்கி விழுந்து புரண்டு.

வதந்திகளுக்கு பயந்து குடியெழும்பி ஓடும்மக்களையும் அறியாமை, பயம், என்பனவற்றுக்கு அடிமையானதையும் எண்ணியபடி மன வேதனையுடன் ஜடம்போல் நடக்கிறான் பொன்னம்பலம்.

அல்லல்பட்டு அகதிமுகாமில் வாழ்ந்த காலம் ஒன்பது மாதங்களாயிற்று.. வரிசையில் நின்று உழுத்த அரிசியும், பழையபருப்பும், வாந்திவரும் வெளிநாட்டு மீன் ரின்னுமாக, உடலும், உள்ளமும் இழைத்து போய்விட்டது. ஆனால் ஊரில் எதுவும் நடக்கவில்லை. மனிதனுக்கு மனிதன் பயந்து ஓடி ஒழிந்து கொடுமைகளை அனுபவித்து ஆடுமாடுகளாய் அடைபட்டு கிடந்தார்களே தவிர, இந்த ஊரில் வாழ்ந்த எந்த உயிருக்கும் ஒரு ஆபத்தும் ஏற்படவில்லை. வதந்திகளைப்பரப்பி கொள்ளையடிக்கும் கூட்டம் மட்டும் வயிறுகளை வளர்த்துக் கொண்டது.

அரிசி, பருப்பு, மாவைக் கொடுத்து முத்து, பவளம், மாணிக்கம் என மேலைநாடுகள் சுருட்டிக் கொண்டன. தமது அடிவருடிகளை அரசியல் அந்தஸ்திற்கு உயர்த்த.. அந்நிய தேசத்திற்கு இவ்வாறான குழப்ப நிலைகள் தேவையாயகவும் இருந்தன.

"பார்வதி... இந்தச் சனங்கள் பயந்து போய் ஊரைவிட்டு ஓடி வந்தது தான் மிச்சம் இப்ப நிலைமை சரியாயிட்டு . நாம இப்ப ஊருக்குப் போறல்ல. கத்திக் கத்தி சொன்னதைகேட்காம ஓடி வந்த கோழைகள், என்னவாவது செய்யட்டும். நான் போய் சோதையன் கட்டுல வெள்ளாம செய்யப்போறன்." பல நாள் யோசித்த பின் எடுத்த முடிவை சொன்னான் பொன்னம்பலம் ''என்ன? இது... இன்னும் நல்லா ஆக்கள் போய்வரல்ல..." என பயத்துடன் இழுத்தாள் பார்வதி. "கையில காசில்ல. நெடுக நாம இப்படி இருக்கலாமா? நம்மட **தாய் மண்ணில்** விதைக்கணும், சாப்பிடணும்..." என்ற பொன்னம்பலத்தின் முடிவை இனி மாற்ற இயலாது என்பது பார்வதிக்கு தெரியும். "அது சரி காசு வேணுமே.. என்ன செய்யிற? என வினவியவளை வெறித்துப் பார்க்கிறான் பொன்னம்பலம். "பார்வதி.. தாலிக்கொடியைத் தா அடவு வைச்சிட்டு பிறகு எடுப்பம்..." உறுதியாகவும் அதே நேரம் மெதுவாகவும் சொன்னான் பொன்னம்பலம். "சுள்" ளென்று நெஞ்சு வலித்தது பார்வதிக்கு "....என்ன.... தாலிக்கொடியா?." என அதிர்கிறாள் பார்வதி. "ஏன் சத்தம் போடுறா.. மூணு மாதத்தில எடுக்கலாம்தானே". சாந்தப்படுத்துகின்றான் பொன்னம்பலம். அன்றிரவு பார்வதிக்கு கெட்ட கனவுகள் வருகின்றன. கண்களை மூடும் பயத்தில் விழித்தபடி புரள்கிறாள்.

தாலிக்கொடியை அடகு வைத்த பணத்தில் செலவுக்கெடுத்துக்கொண்டு சோதையன் கட்டு வயலை நோக்கி சைக்கிளில் புறப்பட்டான் பொன்னம்பலம். மாரியம்மாளுக்கு நேர்த்தி வைக்கிறாள் பார்வதி.

வீதியில் ஒரு பிரச்சினையும் இல்லை. சுமுகமாக எல்லாம் நடக்கின்றன. கடைகளில் சனங்கள் பேதங்களின்றி எல்லாவற்றையும் மறந்த நிலையில் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்து... மனித உணர்வுகளைக் கண்டு பொன்னம்பலம் சிரிக்கின்றான். ஒருவரை ஒருவர் புரியாதவர்களாக உண்மை தன்மை விளங்காதவர்களாகவும் இலாபம் தேடும் ஓநாய்களுக்கு இரையாகும் மனிதப் பிண்டங்களாகவும் வாழுவதை தவிர்த்தால் மனிதம்

என்றும் உயிர் வாழும். காவத்தமுனை சந்தி கழிந்து நாத்தப் பாலத்தில் ஏறினால் அகன்று விரிந்த வயல் வெளியின் நடுவில் தொலைதூரத்தில் பளிச்சென்று ஒளிரும் தாவசக் காக்காவின் தகரத்தாலான தேனீர்க்கடை அதற்கு முன்னால் மலைப்பாம்பாய் வளைந்து நெளிந்து போகும் பாதையின் முடிவில் சோதையன்கட்டு.

தாவசக் காக்காவின் கடைக்கு முன்னால் நின்ற பனை மரத்தில் சைக்கிளை சாத்திவிட்டு கடைக்குள் போனான் பொன்னம்பலம். '' என்ன, பொன்னம்பலம்... சுகமா? இருக்கியா?'' பெருத்த தொந்தியும், மொட்டைத் தலையும், வெள்ளைச் சாரன் பெனியனுடனும் கறுத்து அகன்ற இடுப்பு வார்ப்பட்டியுடன் பொக்கை வாயை திறந்து சிரித்துக் கொண்டே கேட்டார்.

''ஓம் வாப்பா இஞ்சால ஒண்டுமில்லேயே.....'' என்றபடி ஒரு தயிர் வடையை எடுத்து கடித்தபடி வாங்கில் குந்தினான் பொன்னம்பலம். ''அல்லாஹ்ட காவல், இந்த சனங்கள் என்ன பாடுபட்டுதுகள் சும்மா வதந்தியை கிளப்பி எல்லாத்தையும் அழிச்சி. ஹரவாப் போவானுகள்'' இஞ்சிக் கிழங்கை பஞ்சாய்தட்டி ஊற்றிய தேனீரை, சொல்லிக்கொண்டே பொன்னம்பலத்திடம் கொடுக்கிறார் தாவசக்காக்கா. வாகனேரி தொடக்கம் கோராவெளி வரை உள்ள தமிழ் கிராம மக்கள் அனைவருக்கும் தாவசக் காக்கா ஒரு தர்மவானாகவே காட்சி தந்தார்.

பசியென்று வருவோரை ஆதரித்து உணவு கொடுப்பதில் அவருக்கு நிகர் அவர்தான். ''என்னடா பொன்னா.....'' என்றுபடிவியர்க்க விறுவிறுக்க வந்தான் ஆதம். பொன்னம்பலத்தின் பள்ளிக்கூடக் கூட்டாளி. ஆண், பெண், தமிழ், முஸ்லிம், சிங்களமென்ற பேதமின்றி அனைவரும் கற்ற காலத்தில். ஒரு தாய் பிள்ளைகள் போல் பழகிய அப்பொற்காலம் நினைவுகளில் வந்தது. உறவு அது ஒரு பொற்காலம்.

''அட! ஆதமா... வாடாப்பா எப்பிடி கிடக்கு வயல்,'' ஆவலாய்க்கேட்டான் பொன்னம்பலம். ''நான் எங்க இஞ்சால வந்த நீங்க ஓடின மட்டக்களப்புக்கு. நாங்க போன பொலன்நறுவைக்கு. தூ நாசமாப் போவானுகள்'' ஆதம் அலுத்துக்கொண்டான். ''சரி வா போவம்'' என்ற பொன்னம்பலம், ''ஆதம், என்ன பிளேன் டீ குடிக்கிறயா?'' எனக் கேட்க, ''நான் இப்பதான் சாப்பிட்ட, வா போய்ப் பார்ப்பம்'' என எழுந்தான்.

''பொன்னம்பலம் காசைக் கொடுத்துவிட்டு வா'' இருவரும் சைக்கிளை

மிதித்தனர். பொன் விளையும் பூமியான சோதையன் கட்டு சோபையிழந்து கிடந்தது; காடு வளர்ந்து புத்துகள் எழும்பி அடையாளமே தெரியாமல் போயிற்று. மனம் தளராத பொன்னம்பலம் அடுத்த சில நாட்களில் முழு மூச்சாக வேலைகளில் இறங்கினான். விதைத்து பயிரும் முளைத்தாலும் சில மனிதர்களின் மனம்போல் வானமும் பொய்த்துப் போனது மழையில்லை. ஒரே வரட்சி; படிப்படியாக இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறினர். சின்னா-பின்னாமாகி கிடந்த பண்டைத் தமிழ் கிராமம் மீண்டும் புதுப்பொலிவு பெறவாரம்பிக்கிறது.

பொன்னம்பலத்திற்கு ஊருக்கு வந்தது நிம்மதி என்றாலும் வேளாண்மை பெருங்கவலையை ஏற்படுத்திற்று. வயலைப் பார்க்கும்போது பார்வதியின் தாலிக்கொடி பயம் காட்டிற்று. எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்கிய ஒரே ஒரு சொத்தும் இல்லையென்றால்! மாரியம்மாளே! இது என்ன சோதனை, எப்படி தாலிக் கொடியை மீட்பது நாட்டிலே அறம் பிழைத்துப்போனது, ஜீவகாருண்யம் மறைந்து அநீதியும், அக்கிரமங்களும் கூடிற்று. பொய்யும் பித்தாலட்டமும், கபடத் தனமும் கொலை வெறியும் மலிந்த நாடு உருப்படுமா? எத்தனை தடைவைகள் உயிரைக் காப்பதற்கான ஓட்டம் என்ன இருக்கிறது. தமிழ் மக்களது மரண ஒப்பாரியும் உயிர், உடைமை, வீடு. வாசல், எதிர்கால நம்பிக்கையில் சேர்ந்த பொருளாதாரவளம் ஒன்றும் இல்லை. சர்வதேசமும் இலங்கைத் தமிழர்களின் வெந்த நெஞ்சில் சுதந்திர நாட்டின் நிரந்தர அடிமைகள் முத்திரையை மிகத் தெளிவாக குத்திவிட்டது. இனி எப்படி வாழ்வது? வயல் வாய்க்கால் ஓரத்தில் மருத மர நிழலில் ஆழ்ந்த சிந்தனையில் கிடந்த பொன்னம்பலம், நரி ஒன்றின் ஊளைச் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தான். ''பொழுது போயிற்று'' என்றபடி, விரைவாக சைக்கிளில் ஏறினான் பயிர்கள் கருகிக் கிடந்தன இனியும் இதை நம்பத் தேவையில்லை. சைக்கிள் காட்டுப் பாதைக்குள் புகுந்து சென்றபோது எதிரே டுமில் என்றொரு சத்தம்; பொன்னம்பலத்தின் இதயத்தை சிதைத்தபடி ஏதோ ஊடுருவிப்போனது ''அம்மா...'' என்ற இறுதி ஒலியோடு சோதையன்கட்டு மண்ணிலே சரிந்து விழுந்தான். வாய் நிறைய இரத்தம் வந்து மழைபோல... மண்ணிலே பரவிற்று. ஆந்தையொன்று அலறியபடி பறந்தது. பொன்னம்பலம் இனம் தெரியாத நபர்களினால் கொல்லப்பட்டதற்காக விதவைப் பெண் பார்வதிக்கு ஐம்பதாயிரம் ரூபா மரண நன்கொடை நிதி அரசினால் வழங்கப்பட்டது. ''புள்ள இந்த காசை என்ன செய்யப்போறா?'' கண்ணீரோடு நிற்கும் பார்வதியிடம் கேட்கிறாள் பக்கத்து வீட்டுப் பூரணம். வெறித்த பார்வையுடன்

பார்வதி சொன்னாள் ''தாலிக்கொடியை மீட்டெடுக்கப்போறன்..'' பெரிதாகச் சிரித்தாள் பூரணம். ''புருஷன் செத்தவளுக்கு தாலிக்கொடி என்னத்திற்கு?'' பரிகாசமாய் பூரணம் கேட்க, இந்த சமூகத்தையும், பூரணத்தையும் பார்த்து கண்ணீர் வழிய பார்வதி சொல்கிறாள்.

''எனது கணவன் என்னோடுதான் இருக்கிறார், அவர் உழைச்ச பணத்தில வாங்கியதை அடவு வைச்சார், அவர் செத்ததுக்கு தந்த பணத்தில அதை மீட்டு நான் சாகும் வரை வைச்சிருப்பன்.'' பளீரென்று மின்னல் ஒன்று கீழ்வானில் கொடியாய் தோன்றி மறைய கறுத்த மேகங்கள் கண்ணீர் விடத் தொடங்கின. காற்று வேகமாக வீசிற்று. மண்ணில் ஒரு பிரளயத்தை ஏற்படுத்துவதைப்போல் மழை ஓங்காரமாய் பெய்கிறது.

**செல்வி மகாதேவன் மதிஷிகா**
அண்ணா வீதி
கறுவாக்கேணி
வாழைச்சேனை

# அம்மா எனும் சொல்



தமிழின் முதல் எழுத்து 'அ' ஆகும்
'அ' எனும் எழுத்தின் முதல் சொல் அம்மா
அளக்கமுடியாத உறவுச்சொல் அம்மா
ஆழம் காணாத அன்புச் சொல் அம்மா
அன்றும் இன்றும் என்றும் மாறாத சொல் அம்மா
அன்பை அள்ளித்தரும் பாசச் சொல் அம்மா
உள்ளமும் உதடும் எப்போதும் மறக்காத சொல் அம்மா
அனைத்து ஜீவன்களுக்குக்கும் உயிர்கொடுக்கும்
வயது பாராது பண்பாக சொல்லும் சொல் அம்மா
முடியாத போதும் மனம் சோர்ந்தபோதும் ஆறுதலுக்காக தேடும் சொல் அம்மா

அரவணைக்க எப்பவும் காத்திருக்கும் சொல் அம்மா
கடவுள் தந்த கண்கண்டதெய்வத்தின் பெயர் அம்மா
அம்மா எனும் அந்த புனிதமான சொல்
பெருமையானது போற்றக்கூடியது துதிக்கக்கூடியது.

**திருமதி சாந்தினி குமாரவேல்**
கிராமசேவையாளர் - புதுக்குடியிருப்பு
கண்ணகிபுரம்
வாழைச்சேனை



# கடலும் அழகும்

இனியதோர் மாலைப் பொழுதில்
எழுதுமோர் கவிதைக்காக
கனிவுடன் கடலும் பாடும்
கரையினில் நானும் இருந்தேன்

வான்முகந் தடவும் நிலவு
வந்தமே ஒளியைப்பார்க்க
தேனொளி தடவிப்போகும்
திசையெல்லாம் அழகேயாகும்

தாழைகள் இதழை விரித்து
மாலைகள் சூடும் மாலை
மனதினை விரியச் செய்யும்
மணத்தினை அள்ளி வீசும்

அலைகளை தாண்டிப் போகும்
படகுகள் பாயை விரித்து
மலைகளைப்போலே கடலில் மடியில்
மடையினைத் திறந்தேயோடும்

நுரைகளை அள்ளி வீசி
நுழைந்திடும் அலைகள் தம்மின்
கரங்களே கரையில் மோத
களிப்புடன் இனிமை பொங்கும்

தரையினில் நண்டும் ஏறி
தடங்களைப் பதித்துப்போக
கரையெல்லாங் கோலம் போடும்
காட்சியே அதிகமாகும்.

மீனவர் பாட்டில் காற்று
மெதுவாகத் தாளம் போடும்
மெல்லிய ஒளியில் நிலவு
நாணத்தில் தலையை நீட்டும்.

நாளுமோர் தொழிலைச் செய்ய
வளைத்துமே வலையை விரித்து
கடுந்துயர் பட்ட மாந்தர்
வாழ்விலே துயரம் என்றால்
வளமெல்லாம் கிடைக்குமா?

**செல்வி. மகாதேவன் சந்திரபானு**
மட்/விக்கினேஸ்வரா வித்தியாலயம்
கறுவாக்கேணி வாழைச்சேனை

*பிரதேச செயலக இலக்கிய விழா 2010 போட்டியில் பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் முதலாம் இடம் பெற்ற கவிதை*



# மீள் குடியமர்வு எப்போது?

உலகோரே வாருங்கள்
என் உணர்வுகளைக்
கேளுங்கள்
எப்பக்கமின்றி
அன்று முதல் இன்றுவரை
ஆண்டவன் பக்கம் வாழும்
அப்பாவிப் பெண் நானும்
உரைக்கின்றேன் கேளுங்கள்

அன்று
அலைந்தோம், அலைந்தோம்
அகதிகளாய் நாம் அலைந்தோம்
அடித்தவர் கோடிக்குள்
அடிபணிந்தும் நாம் கிடந்தோம்

வளர்த்த செல்லப் பிராணிகளை
வழித் தெருவில் தவிக்கவிட்டு
நடந்தோம் நடந்தோம்
நெடுந்தூரம் நாம் நடந்தோம்

கடந்தோம் கடந்தோம்
பிணங்களையும் நாம் கடந்தோம்
உறவுகளைஇழந்தோம்
ஊனங்கள் பல அடைந்தோம்

அக்கரையிலிருந்தோம்
இக்கரைக்கு வந்தோம்
இன்று அகதி முகாமுக்குள்
அடைக்கலம் நாம் புகுந்தோம்.

எறும்புக் கூட்டம்போல்
எதற்கும் வரிசை இங்கே

என்ன இது வாழ்க்கை என்றே
எண்ணி மனம் வெறுக்குதிங்கே

வசதியுள்ள பிள்ளை இங்கே
வாயால் உண்கையிலே
வறுமையுற்ற பிள்ளை இங்கே
வாய் பார்த்து ஏங்குதிங்கே

மாமிமார் மருமகளும்
மைத்துனிமார் சச்சரவும்
ஒரு வீட்டிற்குள்ளேதான்
ஓயாமல் நடக்குதிங்கே

சொந்த இடத்தினிலே எம்
சொந்தக் கிணறிருக்க
ஆற்று நீர் சேற்றினிலே
அன்றாடம் குளிக்கின்றோம்

தகர வீட்டு வெக்கை
தலை வெடித்துப் போகின்றது
அம்மை நோய் வந்தெம்மை
ஆட்டிப் படைக்கின்றது.

எத்தனை நாள் இங்கிருந்து
ஏங்கி நாம் தவிக்கிறது
எமை மீளக் குடியமர்வு
செய்வது தான் எப்போது

**செல்வி ஸ்ரீ. துஷியந்தி**
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்
பேத்தாழை
வாழைச்சேனை

*(பிரதேச செயலக இலக்கிய விழா 2010 பாடசாலை மட்ட போட்டியில் பிரதேச மட்டத்தில் 1ம் இடமும் மாவட்ட மட்டத்தில் 2ம் இடமும் பெற்ற கவிதை)*



# நெசவுத் தொழிலின் மாண்பு

மனிதருக்கு மானமதைக் காக்கும் சேவை
மண்டலத்தில் எதுவென்று பார்க்குங் காலை
துணி நெசவு செய்கின்ற தொழிலா மென்று
தூயமொழி ஔவையுமே சொன்னாரென்று
தனிமனிதன் தையலர்கள் சிறுமி பாலர்
தரித்து நிதம் தங்களுடற் குளிரைப் போக்கிப்
புனிதமுடன் அழகு செயப் புடவை வேண்டும்
பூவுலகோர் மாண்புகளைப் புரிந்து கொள்வார்

வானவில்லின் நிறமெல்லாம் வகையாய்ச் சேர
வண்ண வண்ணப் புடவைகளை நெய்து யார்க்கும்
மானமரி யாதையுடன் நெசவைச் செய்யும் வேலை
ஈனமுள தொழிலென்று எவருஞ் சொல்லார்
இப்புவியி லிதன்மகிமை இயம்பலாமோ?
தானமிட முதற் பொருளாய்த் தரணி மீதில்
தந்தனரே செங்குந்தர் ஆடை தன்னை

பாவமற்ற தொழிலென்றே பாரில் முன்னாள்
பஞ்சுதனை நூலாக்கிப் பாவுமோடி
தாவரிய தறியிலிட்டு விழுது மச்சும்
தரமான நாடாவிற் றாருஞ் சோ்த்து
தேவர்திரு வள்ளுவருந் தெரிந்து செய்த
சேவையது தெய்வீகத் தொழிலா மன்றோ
நாவதனால் நாம் புகல வேண்டுமோ தான்
நாடறிந்த பெருந் தொழிலும் நெசவுதானே.

ஆதியிலே தாமரையின் நூலைக் கொய்து
அம்புலியில் முனிவர்க்கும் பாவையோடி
வேதியனா மகத்தியனை விழுது மாக்கி
வேதகுல வியாசனுமே நாடாவாகி

பாதிமதி முடியணிந்த பரமனாரும்
பச்சைமால் முன்தண்டு மாகிநிற்கச்
சோதிசெறி பட்டுநூற் புடவை நெய்து
துலங்கவே பாரினர்க்குக் காட்டினாரே

பாரதத்தின் சுதந்திரத்தைப் பறித்த வெள்ளைப்
பறங்கியரை எதிர்க்க வென்றே நெசவு தன்னை
ஊரறியச் செய்து கதர் இயக்கந் தந்தார்
உண்மையுள்ள காந்திமகான் உலகமுய்ய
போரதையே நிறுத்தி மதிச் சாத்வீகத்தால்
பொன்னான இராட்டினத்தைக் கையிலேந்திப்
பாரதையே பணியவைத்த பண்புத் தொண்டின்
பகரறிய உயர் சின்னம் நெசவுதானே.

உலகிலுள்ள மக்களுக்கு உயர்ந்த தேவை
உணவு உடை வீடெனவே வகுத்துச் சொன்னார்
பலவகையாம் பயிர்வகைகள் தானியங்கள்
பாரினிலே விளைவித்துப் பசியைத் தீர்த்தார்
செம்மையாக ஆடைநெய்து மானங்காத்த
செங்குந்தர் உளரென்னும் எண்ணத்தாலே
குலமக்கள் கோலவுடை செய்யும்வேலை
குறித்தமைத்தார் நெசவுத் தொழிற் சாலைகளை

பூவுலகில் புடவைத் தொழில் பொலிந்து வாழ
பிள்ளைகளும் பெரியோரும் மகிழ்ந்து பாட
பாவுணரும் பண்டிதர்கள் புகழ்ந்து போற்ற
பழகு தொழில் நெசவாளர் பாரில் வாழ
தேவுலகோர் பூமாரி பொழிந்து காக்கத்
தெய்வதலப் பூசையோடு தேவாரங்கள்
நாவுகளில் ஒலியிசைப்ப நம்மூர் தேசம்
நலம்பெற்று வாழ்கவென வாழ்த்துவோமே.

**தமிழ்மணி சிவ விவேகானந்தமுதலியாரின் புத்திரன்**
வித்தியானந்தமுதலியார்
பதவிநிலை உதவியாளர்,
பிரதேச செயலகம், வாழைச்சேனை



# தண்ணீர்

நீரின்றிப் போனா லிந்த
நில மெல்லாம் வரண்டு போகும்
உணர்வின்றிப் பயிர்கள் யாவும்
உயிரிழந்து கருகிச் சாகும்

வேரின்றி மரங்கள் சாயும்
வேதனைப் பட்டு வேகும்
பூவின்றி இலையுமின்றி
விதவையாய் வேடம் பூணும்

ஓடையில் ஓடும் மீன்கள்
உருவெல்லாம் மாறிக் காயும்
ஒய்யாரம் இழந்த நாணல்
ஓலையாய்ச் சுருண்டு மாயும்

ஆறுகள் குளங்கள் வற்றும்
அழகிய பூக்கள் உதிரும்
நீர்நிலை நிலமும் தெரியும்
நீண்ட தோர் அருவி அடங்கும்

பசுமைகள் யாவும் மறைந்து
பதைக்கின்ற கொடுமை கூடும்
பருகிட நீரும் அற்றுப் (ப்)
பாரெல்லாம் பஞ்சமாகும்

கால்நடைக் கூட்டம் எல்லாம்
கதறியே நீரைத் தேடும்
கானலில் கண்ட நீரை
கன தூரம் தேடி யலையும்.

பிரதேச செயலகம், வாழைச்சேனை

பூஞ்சோலைக் குயில்கள் வாடும்
புதுக்கவிதை மறந்து வாழும்
புன்னகை இழந்து நாளும்
புதியதோர் இடத்தைத் தேடும்

கார் முகில் இல்லை என்றால்
கான மயில் ஆடல் குறையும்
வான்மீது வான வில்லின்
வர்ணங்கள் எழு மழியும்

தாகமாய் மனிதர் தம்மின
தளிருடல் தவித்து வாளும்
சோகமாய் உயிர்கள் துடிக்கும்
சொல்லொணாத் துயரில் மூழ்கும்

நிலமெலாம் நெருப்பாய்(க்) கொதிக்கும்
நெற்பயிர்கள் நனைவை இழக்கும்
வளமுடன் செழித்த களனி
வடிவிழந்து பாலையாகும்

தென்றலும் தீயாய் மாறும்
தெருவெலாம் புழுதி சேரும்
மழையற்றுப் போனாலிங்கு
மற்றெது? வாழவைக்கும்

எழிலுறு மழையே தாயே
இயற்கையின் நல்ல கொடையே
இறைவனின் கருணை பெற்றே
இரங்கி வா இறங்கி வா வா

**முத்துமாதவன்**
அண்ணாவீதி, கறுவாக்கேணி

*(பிரதேச செயலக இலக்கிய விழா 2010 திறந்த மட்ட போட்டியில் தேசிய ரீதியில் 1ம் இடம் பெற்ற கவிதை)*



# பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

## செல்வி ரக்ஷனாவின் விளையாட்டு திறமை

| | | |
|---|---|---|
| பிரதேச செயலாளர் பிரிவு | : | கோறளைப்பற்று வாழைச்சேனை |
| கிராம சேவையாளர் பிரிவு | : | கறுவாக்கேணி |
| கிராமம் | : | கொண்டையன் கேணி |
| பிறந்த திகதி | : | 1996.08.19 |
| தந்தை | : | ரி.கந்தசாமி |
| தாய் | : | எம்.கோகிலா |
| பாடசாலை | : | கறுவாக்கேணி விக்கினேஸ்வரா வித்தியாலயம் |

2008ம் ஆண்டு விளையாட்டு அமைச்சினால் அறிவிக்கப்பட்ட ''கிறீடா சக்கி" விளையாட்டு ஊக்குவிப்புக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளல் என்னும் செயற்பாட்டின் கீழ்.

எமது பிரதேச செயலாளரின் அனுமதியுடன் மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவியாக பங்கு கொண்டு தனது தெரிவை உறுதி செய்து கொண்டார்.

பின்னர் தொடர்ச்சியான சிறந்த பயிற்சிகளை பெற்றுக் கொள்வதற்காக பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்மூலம் பயிற்றுனர்கள் திருவி.பூபாலராஜா, ரி.சோமஸ்காந்தன், எஸ்.சுவர்ணச் சந்திரன் ஆகியோரின் வழிகாட்டலில் பயிற்சிகளைப் பெற்று இவ் வருடம் நடைபெற்ற பிரதேசமட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டப் போட்டிகளில் திறமையைக் காண்பித்து எமது பிரதேச செயலக பிரிவுக்கு பெருமையைத் தேடித் தந்துள்ளார்.

இவர் வெற்றியீட்டிய போட்டி விபரம் :

| பாடசாலை மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|
| 1. 200m 1 ம் இடம் | 1. 200m - 1ம் இடம் |
| 2. 100m 1ம் இடம் | 2. 100m 2ம் இடம் |
| 3. உயரம் பாய்தல் - 1ம் இடம் | 3. உயரம் பாய்தல் - 02ம் இடம் |

கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட போட்டியில்

மாவட்ட மட்டம்
1. 100m 1ம் இடம்
2. 200m 2ம் இடம்
3. 400m - 1ம் இடம்

மாகாண மட்டம்
1. 400m - 2ம் இடம்
2. 100m - 3ம் இடம்
3. 200m - 3ம் இடம்
4. 4 X 100m - 3ம் இடம்
4. 4 X 400m - 3ம் இடம்



சிறந்த சாதனையாளர்: இலக்கியத்துறை
பெயர் : கந்தையா செல்வநாயகம்
புனை பெயர் : தாழை செல்வநாயகம்
பிறந்த இடம் : வாழைச்சேனை
கல்வித்தகைமை : க.பொ.த.உயர் தரம், கலை முதற் தேர்வு (G.A.Q)
தொழில் : பகுதி வன அதிகாரி (BFO) யாக பதவி வகித்து அரசு ஓய்வூதியம் பெறுபவர்

முதற்படைப்பு வெளியான பத்திரிகை அல்லது சஞ்சிகை : 1968 இல், தேனருவி கையெழுத்துச் சஞ்சிகையில் (வெல்லவூர் கோபாலின்) 'நான்' என்னும் சிறுகதை.

படைப்புகள் வெளியான பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகள் : வீரகேசரி, சுதந்திரன், தினகரன், மித்திரன், தினக்கதிர், சுடர், தாரகை, ஞானம், இளம்பரிதி.



எழுதிய ஆக்ககங்கள் :

| | |
|---|---|
| கட்டுரைகள் | - 50 |
| சிறுகதைகள் | - 30 |
| நாடகங்கள் | - 25 |
| கவிதைகள் | - 10 |
| வானொலிப் பேச்சுகள் | - 10 |

படைப்புக்களின் தன்மை : நாட்டாரியல் காட்டுவளம் பிரதேச இலக்கியம் வரலாற்றுச் செய்திகள், பாரம்பரியக் கலைகள், சமகாலப் பிரச்சினைகள், சமயக் கட்டுரைகள், நகைச்சுவைக் கட்டுரைகள், நாடகங்கள், ஆய்வுக் கட்டுரைகள்.

வெளியிடப் பட்ட நூல்கள் :

1. ஏதிலிகள்(சிறுகதைத் தொகுப்பு) - 2007
2. ஈழம்வருகிறான் பாரதி (நாடகங்கள் ) - 2009
3. வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள் - 2010

வெளிவரவுள்ள நூல்கள் :

1. நாகமரச்சோலை (நாவல் அச்சில்)
2. சுபத்திரை கல்யாணம் (வடமோடிக்கூத்து)
3. வள்ளியம்மன் நாடகம் (வடமோடிக்கூத்து)
4. சிறுகதை (இரண்டாவது தொகுப்பு)

வேறு கலைத் துறைகள் :

கவியரங்கு , நாடக நடிகர், மகுடி விளையாட்டு, கூத்து தயாரிப்பாளர், 1983- 2007 வரையில் வீரகேசரி நிருபர், 2001 முதல் அரச ஓய்வூதியச் சங்க (கோறளைப் பற்று) தலைவராகவும், மாவட்டம் பொருளாளராகவும் பதவி வகிக்கின்றார்.

இது வரை பெற்ற பரிசுகள் :

சிறுகதை : தேசிய சாகித்திய பரிசு, மாகாண மட்ட (04)நான்கு

மாவட்ட முதல் பரிசுகள் , தாரகை- அகில இலங்கை சிறுகதைப் போட்டி முதலிடம்.

நாடகம் :மாவட்ட மட்டப் பரிசு, நோர்வே கலாசாரப்பேரவை பரிசு (மோல்டே தமிழ் சங்கம்)

பெற்ற விருதுகள் :

1. கௌரவ கலைஞர் விருதுகள் - 2 (2002, 2005)
2. ஆளுநர் விருது (2007 கிழக்கு மாகாண சபை)
3. கலாபூஷண விருது - 2008
4. சாகித்திய (தேசியமடடம்) விருது - 2009

(இவரது படைப்புக்களை ஆய்வு செய்து கிழக்கு பல்கலைக்கழக முதுமானி கற்கை நெறியை பூர்த்தி செய்தவர் திரு.க.நிதிகரன், மட் தேசியக் கல்லூரி ஆசிரிய பயிலுனர், திரு.ப.ஏகலிங்கம்)

*பேரவை வாழ்த்துக்கள்*

*கௌரவ கலைஞர் விருது*



2010ம் ஆண்டு கலாபூஷண விருதுபெற்ற திரு.ஹெட்டியாராச்சி மெத்தியேஸ் அவர்களுக்கு பிரதேச கலாசார பேரவை தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

அவர் தனக்குப் பின்னர் ஓவிய பரம்பரை ஒன்றினை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பது பேரவையின் எதிர்பார்ப்பாகும்.

கலாசாரப் பேரவை.

# பிரதேச இலக்கிய விழா
# போட்டி முடிவுகள் 2010

## அ) பாடசாலை மட்டம்.

### 01) கனிஷ்ட பிரிவு - கட்டுரை

01ம் இடம் - செல்வி ஸ்ரீ. துஷ்யந்தி
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்.

2ம் இடம் - செல்வி – ம. சுஷ்மிதா
மட்/வாழைச்சேனை இந்தக்கல்லூரி

3ம் இடம் - செல்வி வி. ஆக்ஷனா
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்
செல்வி அபிநயா
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

### 02) கனிஷ்ட பிரிவு – கவிதை

01ம் இடம் - செல்வி ஸ்ரீ. துஷ்யந்தி
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்.

2ம் இடம் - செல்வி – பு.கீர்த்தனா
மட்/வாழைச்சேனை இந்தக்கல்லூரி
செல்வி சு.சுபாஜினி
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

3ம் இடம் - செல்வி ச. வேணுஜா
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

### 03) கனிஷ்ட பிரிவு - சிறுகதை

1ம் இடம் - செல்வி ஸ்ரீ.துஷ்யந்தி
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

### 01) சிரேஷ்ட பிரிவு - கவிதை

1ம் இடம் - செல்வி ம.சந்திரபானு
மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

2ம் இடம் - செல்வன்.ஜீ.பாலராஜ்
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

செல்வி.ம.கிருசாந்தி
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

3ம் இடம் - செல்வி ரா. காத்தியாஜினி
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

02) சிரேஸ்ட பிரிவு சிறுகதை

01ம் இடம் - செல்வன்.ரா.லோஜித்
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

02ம் இடம் - செல்வி.ஸ்ரீ. கிருசாந்தி
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

03) இடம் - செல்வி பிரஸண்யா
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

## திறந்த மட்டப் போட்டிகள்

### சிறுகதை

01ம் இடம் - திரு.க. செல்வநாயகம்
(தாழை செல்வநாயகம்
கல்குடா வீதி பேத்தாழை வாழைச்சேனை
- திரு.மு.மகாதேவன் (முத்துமாதவன்)
அண்ணா வீதி கறுவாக்கேணி வாழைச்சேனை

2ம் இடம் - திருமதி அருந்ததி சுந்தரமூர்த்தி
இல 245 V பதுக்குடியிருப்பு வாழைச்சேனை

### கவிதை

01 இடம் - திரு மு. மகாதேவன் (முத்துமாதவன்)
அண்ணா வீதி கறுவாக்கேணி, வாழைச்சேனை

# பிரதேச இலக்கிய விழா போட்டி முடிவுகள் 2009

## பாடசாலை மட்ட போட்டி முடிவுகள்

அ) கனிஷ்ட பிரிவு

கட்டுரை

1ம் இடம் - செல்வி நா. ஸகானா
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

2ம் இடம் - செல்வன் இ. தனுஜன்
மட்/மீராவோடை அ.த.க. பாடசாலை

3ம் இடம் - செல்வி சாலினி
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

சிறுகதை

1ம் இடம் - செல்வன் யோ. பிரசாந்த்
மட்/மீராவோடை அ.த.க. பாடசாலை

2ம் இடம் - செல்வி அரியக்குட்டி புலோஜிதா
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

3ம் இடம் - செல்வி ஜெ. சோபிகா,
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

கவிதை

1ம் இடம் - செல்வன் இ.தனுஜன்
மட்/மீராவோடை அ.த.க. பாடசாலை
செல்வி த.வினிதா
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

2ம் இடம் - செல்வன் ச.மோகிலன்
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

3ம் இடம் - செல்வி த.வக்சலா
மட்/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்

ஆ) சிரேஸ்ட பிரிவுகள் கட்டுரை

1ம் இடம் - செல்வி ந. திவ்யா
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

2ம் இடம் - செல்வி கு. ரதிகலா
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி

3ம் இடம் - செல்வி ரி.பிரியா
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

சிறுகதை

1ம் இடம் - செல்வி க. ரேக்கா
மட்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி
- செல்வி எம். ரமணி
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்
- செல்வி ச.ரம்யா
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

2ம் இடம் - செல்வன் ச. நிரஞ்சன்
மட்/பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

3ம் இடம் - செல்வி பே. நிஷாந்தினி
மட்/புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்

வெளிமட்ட போட்டி முடிவுகள்

1ம் இடம் - திரு தாழை செல்வநாயகம்
கல்குடாவீதி பேத்தாழை
- திரு முத்துமாதவன்
அண்ணா வீதி கறுவாக்கேணி

2ம் இடம் - செல்வி செல்வி ம. சந்திரபானு
அண்ணா வீதி கறுவாக்கேணி
- செல்வி நே. டிகாஷி
கல்குடா வாழைச்சேனை

3ம் இடம் - செல்வி ஜீ.கார்த்திகா.
கல்குடா

கவிதை

01ம் இடம் - திரு முத்துமாதவன்
அண்ணாவீதி வாழைச்சேனை

2ம் இடம் - செல்வன் அ. யோஷனன்
வாழைச்சேனை

3ம் இடம் - செல்வி நே.டிகானி
கல்குடா, வாழைச்சேனை



# பாராட்டுப் பெறும் மண்ணின் வேர்கள்

முழுப்பெயர் : பெருமாள் புண்ணியமுர்த்தி
முகவரி : புதுக்குடியிருப்பு வாழைச்சேனை
துறை : சோதிடக் கலை, ஜாதகம் கணித்தல், பலன் சொல்லுதல்
பிறந்த திகதி: 1936.08.21

**செய்த சேவைகள் :**

- ✷ பாடசாலை ஆசிரியராக 18 வருடங்கள், பாடசாலை அதிபராக 16 வருடங்கள்
- ✷ வாழைச்சேனை தமிழ் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் வாழைச்சேனை இந்துமாமன்றத் தலைவர்
- ✷ இலங்கை கசரோக தடைச் சங்கத்தின் கோறளைப்பற்று பிரிவில் பொருளாளர்
- ✷ அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் கோறளைப்பற்று பிரிவு பொருளாளர்
- ✷ கொழும்பு விவேகானந்தா சபை ஆயுட்கால உறுப்பினர்
- ✷ வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைச் செயலாளர், தலைவர், ஆலோசகர்
- ✷ புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலய பரிபாலனசபை பொருளாளர் உப தலைவர், ஆலோசகர்.

**பெற்ற கௌரவங்கள் :**

09.09.2005ல் கொழும்பில் நடைபெற்ற உலகச் சேக்கிழார் மகாநாட்டில் சிவநெறிப்புலவர் பட்டம் வழங்கப்பட்டமை.



# பாராட்டுப் பெறும் மண்ணின் வேர்கள்

முழுப்பெயர் : குமாரியன் கந்தையா
முகவரி : விஸ்ணு ஆலய வீதி, கிண்ணயடி, வாழைச்சேனை.
துறை : கூத்துக்கலை
பிறந்த திகதி : 1945.02.22

கோறளைப்பற்று பிரதேச கிண்ணயடி கிராமசேவகர் பிரிவில் பிறந்த ரெட்ணப்பிள்ளை என்ற நாமத்தினையுடைய குமாரியன் கந்தையா என்பவர் அப் பிரதேசத்தின் புகழ் பெற்ற ஒரு அண்ணாவியார் ஆகும். வடமோடி தென்மோடி ஆகிய கூத்துக்கலையினையும் பழக்குவதில் வல்லவராகவுள்ளார். தனது இளமைக்காலத்தில் கூத்தாடும் கூத்துக்கலைஞனாக இருந்து காலவரையில் கூத்துப்பழக்கும் அண்ணாவியாகிவிட்டார். அத்துடன் இவர் கூத்து உடுப்புக்களையும் கூத்துக்கான உபகரணங்களையும் தன் கைப்படச் செய்து பாதுகாப்பாக வைத்துள்ளார்.

இப் பிரதேசத்தில் கூத்தாடுபவர்களுக்கு அவரே உடுப்புக்கள் ஒப்பனைப்பொருட்கள் ஏனைய கூத்து உபகரணங்களை வாடகைக்கு வழங்குபவராக உள்ளார். அத்துடன் மத்தளம் செய்வதிலும் மத்தளத்திற்குரிய தோல்களைப் பதப்படுத்தி புதிய மத்தளங்களை தயாரிப்பதில் வல்லவராகவுள்ளார். இவர் ஓர் அண்ணாவியார் மட்டுமின்றி சிற்பக் கலைஞராகவும் உள்ளார். சரஸ்வதி, லெட்சுமி பிள்ளையார் அனுமன் போன்ற உருவங்களை தனது கைப்பட உருவாக்கியுள்ளார். கிண்ணயடிப் பிள்ளையார் கோவிலில் இவர் உருவாக்கிய சிற்பங்கள் காணப்படுகின்றது. எனவே கோறளைப்பற்று பிரதேசத்தில் உள்ள ஒரு சிறந்த கலைஞராக இவரைக் குறிப்பிட முடியும்.

**இவர் பழக்கிய கூத்துக்கள் :**

| | |
|---|---|
| சயந்தன் நாடகம் | ராம நாடகம் |
| தசக்கிரீவன் சண்டை | கண்ணகி கல்யாணம் |
| கண்டிராசன் கதை | ஏலக்கன்னி சபதம் |



# பாராட்டுப் பெறும் மண்ணின் வேர்கள்

முழுப்பெயர் : முத்தையா சரோஜனி
முகவரி : கல்குடா வீதி வாழைச்சேனை
துறை : ஆயுர்வேத வைத்தியர்
பிறந்த திகதி : 1947.10.07

வாழைச்சேனை பிரபல பரிசாரி பரம்பரையில் பிறந்த இவர் ஒன்பதாவது தலைமுறையினையை சேர்ந்தவர். சிதம்பரநாதப் பரிசாரியார் சின்னத்தம்பிபரிசாரியார், வரிசையில் திரு.சி.ப.முத்தையா - திருமதி தெய்வானைப்பிள்ளை முத்தையா ஆகிய வைத்திய தம்பதியினருக்கு மகளாகப் பிறந்த இவர் கடந்த 20 வருட காலங்களாக இவ் வைத்திய துறையில் ஈடுபட்டுவருவதாக கூறுகிறார்.

வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் படித்த இவர் முதலில் சர்வோதய பாடசாலையில் ஆசிரியையாக கடமையாற்றி பல மாணவர்களை உருவாக்கினார் தற்போதைய கிழக்கின் முதலமைச்சர் சி.சந்திரகாந்தனும் தன்னிடம் பாலர் பாடசாலை மாணவனாக கல்வி பயின்றவர். என பெருமைப்படுகின்றார்.

தன்னிடம் முஸ்லிம் பகுதியைச் சேர்ந்தவர்களும் வந்துகுளிசை, தூள் ஆகிய மருந்து வகைகளைப் பெற்றுச் சென்று குணமாகியுள்ளனர். என்றும் இதுவரையில் நூற்றுக் கணக்கானவர்களை தன் வைத்தியத்தின் மூலம் குணப்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

உடலில் ஏற்படும் கட்டு, கிரந்தி, சுளுக்கு போன்றவற்றிற்கும் பிள்ளைப்பேற்றினை அடைந்த தாய்மார்களுக்கான தூள்கட்டு வயிற்றுப்போக்கிற்கான மருந்து ஆகியவற்றினை வழங்கி வைத்தியம் செய்த இவர் சமுக சேவையாளராகவும்; வைத்தியர்களுக்கான கருத்தரங்கில் பங்குபற்றியவராகவும் உள்ளார்.

# பாராட்டுப் பெறும் மண்ணின் வேர்கள்



முழுப்பெயர் : ராசமாணிக்கம் எதிர்மன்னசிங்கம்
முகவரி : 23 கல்குடா வீதி வாழைச்சேனை
துறை : நாடக நடிகர், விளையாட்டு வீரர்
பிறந்த திகதி : 1942.10.20

தொழில் காகிதாலை தொழில்நுட்ப உத்தியோகத்தராக இருந்து ஓய்வு பெற்றவர். வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் வாழைச்சேனை அரசினர் பாடசாலையிலும் (இந்துக்கல்லூரி, வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும்) கல்வி கற்று SSC பரீட்சையில் சித்தி பெற்றார் சிரேஸ்ட பாடசாலைத் தராதரம் படிக்கும் காலத்திலேயே விளையாட்டு, நாடகம் ஆகியவற்றில் சாதனைகள் பல புரிந்தார்.

1956 இல் ஜனசக்தி நாடக மன்றத்தின் மூலம் "கள்வனின் காதலி" என்ற நாடகத்தில் நடித்தார். இந் நாடகம் வாழைச்சேனையில் இரண்டு தடவைகள் நடந்தேறியது.

1966 இல் "போடியார் வாழ்க" என்ற நாடகத்திலும் 1967 இல் "மோளப்பா பொன்னுச்சாமி" என்ற நாடகத்திலும் 1968 இல் "வாழ்க்கை ஒரு வசந்தம்" காசிய நாடகம் என்ற நாடகத்திலும் கதாநாயகன், தந்தை ஆகிய பாத்திரங்களை ஏற்று நடித்து மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றவர்.

வாழைச்சேனை கந்தையா விளையாட்டு கழகத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும் போசகராகவும் இருந்துள்ளார். அத்துடன் இவர் தனி ஒருவராக ஓரங்க நாடகம் நடிப்பதில் வல்லவராகவும் உள்ளார். நாடகம் விளையாட்டு ஆகிய துறைகளில் பல சாதனைகனை புரிந்துள்ள இவர் பல வெற்றிக் கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் பாராட்டுதல்களையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பாராட்டுப் பெறும் மண்ணின் வேர்கள்



முழுப்பெயர் : தம்பியப்பா கணபதிப்பிள்ளை
முகவரி : கண்ணகிபுரம் வாழைச்சேனை
துறை : முறிவு வைத்தியர்
பிறந்த தினதி : 1932.01.01

இலங்கை புகையிரத திணைக்களத்தில் இவர் கடமையாற்றியபோது வெலிக்கந்தைப்பகுதியில் உள்ள ஒரு சிங்கள வைத்திய முதாட்டியிடம் தனது வைத்தியத்தினை கற்றுக் கொண்டார். 1960ம் ஆண்டு காலம் முதல் இன்று வரை அரைநூற்றாண்டு காலமாக சுமார் 100 பேர்களுக்கு மேல் முறிவு வைத்தியம் செய்து குணப்படுத்தியுள்ளார்.

இவர் இளமையில் சபாவதியாரின் நாடக மன்றத்தில் சத்தியவான் சாவித்திரி, பவளக்கொடி, வள்ளி திருமணம் ஆகிய நாடகங்களில் நடித்துள்ளார்.

## பிரதேச செயலக அமைப்புக்களின் பாராட்டுக்கள்

2010 ஆம் ஆண்டு பிரதேச செயலக
உள்ளக உத்தியோகத்தர்களின்
வருகையில் அதி குறைந்த
விடுமுறை பெற்று சிறப்பாக கடமை
புரிந்த திரு.யோ.பிரபாகரனுக்கு
கோறளைப்பற்று பிரதேச செயலக
நலன்புரி சங்கம், கலாசாரப்
பேரவை தனது பாராட்டுக்களை
தெரிவித்துக் கொள்கின்றது.



# பாராட்டுப் பெறும் கிராம சேவையாளர்கள்

2010ம் ஆண்டு கிராம சேவையாளர்களுக்கிடையிலான அலுவலக முகாமைப் போட்டியில் 1ம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தினையும் பெற்றுக்கொண்ட கிராம சேவையாளர் திரு.காளியப்பு சண்முகநாதனுக்கு எமது பாராட்டுகள்.

*-கலாசார பேரவை-*

## *2010ம் ஆண்டு பிரதேச செயலக மட்ட போட்டி முடிவுகள்*



திரு.கா.சண்முகநாதன்
(1ம் இடம்)



திரு.ஏ.வசந்தகுமார்
(2ம் இடம்)



திருமதி.சாந்தினி குமாரவேல்
(3ம் இடம்)

வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் காணப்படும் சகல உத்தியோகத்தர்களும் திறமையானவர்களே. இவ்வகையில் எமது பிரதேச செயலகம் மக்களுக்குத் தேவையான சகல சேவைகளையும் வழங்கி வருகின்றது. அவ்வாறான செயற்பாடுகளுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் கிராம சேவையாளர்களுக்கு இடையிலான போட்டியில் சகலரும் தமது சேவையினை திறம்பட செய்தமையினை உணர முடிந்தது. முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களை சிறப்பாகவும், அதேவேளையில் போட்டியில் பங்குபற்றிய சகலரையும் இவ்விடத்தில் பாராட்டுவதுடன் மாவட்ட ரீதியான கிராம சேவையாளருக்கு இடையிலான போட்டியின்போது திரு.காளியப்பு சண்முகநாதனுக்கு உதவிய சகல வாழைச்சேனை பிரதேச செயலக கிராம சேவையாளர்களுக்கும் எனது நன்றிகள். *-பிரதேச செயலாளர்-*

# 2009 தொடக்கம் 2010 வரை பிரதேச அபிவிருத்திகளும் நிகழ்வுகளும்



பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு கூட்டத்தொடர் 2009



வாழ்வாதார திட்டத்தின்கீழ் உபகரணங்கள் வழங்குதல் 2010




நாகதம்பிரான் கோயில் வீதி, முறாவோடை
Gamaneguma



சுங்காங்கேணி, கிண்ணையடி - பிரதான வீதி இணைப்பு
Gamaneguma




SEVAPIYASA கட்டடம், கண்ணகிபுரம்
நிதியுதவி - முதலமைச்சர்



கலாசார மண்டபம், கறுவாக்கேணி
நிதியுதவி - முதலமைச்சர்

மீன்பிடித் துறைமுகம் - வாழைச்சேனை
NEECDEP



அஞ்சல் அலுவலகம் - கல்குடா
நிதியுதவி - கௌரவ.வி.முரளிதரன் (மீள்குடியேற்ற பிரதியமைச்சர்)



பேத்தாழை மாரியம்மன் கோயிலும், அன்னதான மடமும்
நிதியுதவி - முதலமைச்சர்






நவீன பொதுநூலகம் - பேத்தாழை
நிதியுதவி - முதலமைச்சர்



குகநேசன் கலாசார மண்டபம் - பேத்தாழை
நிதியுதவி - முதலமைச்சர்



சிறுவர் விளையாட்டு மைதானம்
- பேத்தாழை,


பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம்
22-07-2010





பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம்
22-07-2010





உலக உணவுத்திட்ட 2010
வடிகால் துப்பரவாக்கலும், வீதியமைத்தலும்.






மாதர் அபிவிருத்திச் சங்கம்
நிதியுதவி - கிராம அபிவிருத்தித் திணைக்களம்



பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி 2010





பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி 2010



அங்கவீனர்களுக்கான உதவி (சமூக சேவை திணைக்களம்)



2010 சிறுவர் தினமும், முதியோர் வாரமும்
23.11.2010





*2010 சிறுவர் தினமும், முதியோர் வாரமும்*
*23.11.2010*





# நன்றியுரை



முத்தமிழ் விழா நிகழ்வுகளுக்கும், இளம்பரிதி நூல் வெளியீட்டுக் குழுவுக்கு உதவிய நிருவாகக் குழு உறுப்பினர்களுக்கும், நிதி ஏற்பாட்டுக் குழுவுக்கும் நிதி வழங்கிய சரீரம் அமைப்புக்கும், மற்றும் பல வழிகளிலும் உதவிய பிரதேச செயலாளருக்கும், உதவிப் பிரதேச செயலாளருக்கும், கீழ்வருவோர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

திருமதி.சி.ஜெயந்திரா
திரு.எஸ் அருள்செல்வன்
ஜனாப்.எஸ்.ஏ.றகீம்
திரு.கே.நாகநாதன்
திரு.கே.சண்முகநாதன்
திரு.எஸ்.அரியக்குட்டி
திருமதி.எஸ்.குமாரவேல்
திரு.கே.கஜேந்திரராஜா
திரு.எஸ்.வரதராஜன்
திரு.ஏ.வசந்தகுமார்
திரு.கே.டிவாஸ்கர்
திரு.கே.லோபனராஜ்
திரு.கே.கிருஷ்ணகாந்த்
செல்வி.எம்.மந்தாகினி
திரு.வீ.எம்.வி.முதலியார்
திருமதி.வி.ரவிராஜ்
திரு.இ.சீதாராமன்
திரு.எஸ்.ரவிச்சந்திரன்
திருமதி.கோ.இந்திரகுமார்
செல்வி.ஜி.ஜெஸ்மிதா
திருமதி.ரி.பவானி
திருமதி.இ.எம்.பிரகலாதன்
திருமதி. ம.ஜீவானந்தா
திரு.வி.தேவராஜா
ஜனாப்.ஜெ.ஜாவிட்
திரு.கே.மாதுளகுமாரன்
திரு.எம்.குகதாசன்
திரு.எம்.விநாயகமூர்த்தி

திரு.ரி.சங்கரலிங்கம்
ஜனாப்.எஸ்.எம்.எம்.முர்ஷித்
திரு.யோ.பிரபாகரன்
திரு.வி.பிரசாந்த்
திரு.என்.நந்தகுமார்
திரு.ஜீ.பாஸ்கர்
திருமதி.கே.யசோதா
திரு.ஏ.சந்திரமோகன்
செல்வி.வை.வாசுகி
திரு.வி.ஜீவரெட்ணம்
திருமதி.எஸ்.சாந்தினி
திரு.எஸ்.தயாபரன்
திருமதி.ஏ.யோகராணி
திருமதி.கே.தங்கமலர்
திரு.ரி.தஜிதரன்
திரு.ஆர்.பிறேமகாந்தன்
திரு.கே.இதயராஜா
திரு.எம்.ஜெயகாந்த்
திரு.கே.அற்புதநாதன்
திரு.கே.விமலநாதன்
திரு.ஆர்.ரவி
திருமதி.எல்.ஜீவராணி
திருமதி.எஸ்.சுமித்திரா
திருமதி.எஸ்.கவிதா
திருமதி.எஸ்.செல்வவதி
திருமதி.எஸ்.ஜமுனா
திருமதி.வை.லோகநாயகி
திருமதி.கே.பத்மசாந்தி
செல்வி.எஸ்.சுகுணா
திரு.எஸ்.ஜெயசேகர்
திரு.எஸ் அருளானந்தம்
திருமதி.எஸ்.யோகராசா
திருமதி.ஜே.யமுனேஸ்வரி
செல்வி.ஆர்.விஜயமாலினி
திருமதி.ஏ.நியூசலா
திரு.வி.வர்ணகுலசிங்கம்
திரு.ஐ.தனஞ்சயன்

**திரு.கா.சிவச்சந்திரன்**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், வாழைச்சேனை
***பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்***
*திருகோணமலை*


BEACON
GUEST HOUSE
& RESTAURANT
බීකොන්
ගැස්ට් හවුස්
& රැස්ටුරන්ට්
வீகொன்
கெஸ்ட் ஹவுஸ்
& ரெஸ்டூரண்ட்
A/C, Non A/C
Rooms with TV
Eastern & Western
Foods
Trinco Road, Vaharai.
Tel : 065 5673006, Mob : 077 3768948
Sheroni Printers, 6th Cross, Kulavady, Batticaloa. Tel: